Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 50

சனிக்கிழமை
15 ஜனவரி 2021

தை 02 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16

விலை: 30/=

**கொரோனா**

| | |
|---|---|
| நேற்று | 677 |
| மொத்தம் | 594,996 |

**உயிரிழப்பு**

| | |
|---|---|
| நேற்று | 16 |
| மொத்தம் | 15190 |

இலங்கையின்

# போர்க்குற்றவாளிகளுக்கு தடை விதிக்கவேண்டும்!

## சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் பிரிட்டனிடம் கூட்டாக வலியுறுத்து

கொழும்பு, ஜனவரி 15

இலங்கையில் இறுதிக்கட்டப் போரின்போது நிகழ்ந்த போர்க்குற்றங்களுக்குப்பொறுப்புக்கூற வேண்டிய கட்டளை வழங்கும் அதிகாரத்திலிருந்த இராணுவ ஜெனரல்களுக்கு சர்வதேச மெக்னிற்ஸ்கி சட்டத்தின் கீழ் பிரிட்டன் அரசாங்கம் தடை விதிக்க வேண்டும் என்று 7 சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் கூட்டாக வலியுறுத்தியுள்ளன.

அதுமாத்திரமன்றி, இந்த வருடம் பிரிட்டனில் நடைபெறவுள்ள பொது நலவாய நாடுகளின் விளையாட்டுப் போட்டியில்பங்கேற்பதற்கு, முன்னாள் இராணுவத் தளபதி ஜெகத்ஜெயசூரிய தனது அணியுடன் பிரிட்டனுக்கு வருகைதரும் பட்சத்தில், சர்வதேச சட்டவரம்பின் கீழ் அவரைக் கைது செய்து விசாரணையை ஆரம்பிப்பதொன்றே தற்போது பிரிட்டன் செய்யக்கூடிய மிகக்குறைந்தபட்ச நடவடிக்கையாகும் என்றும் அந்த அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன. இதுகுறித்து சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்றிட்டம், தொழிற் கட்சிக்கு ஆதரவான தமிழர்கள், பிரிட்டன் தமிழ் பழமைவாதிகள்

15

## முள்ளிவாய்க்காலில் புலிகளின் ஆவணங்கள்

முல்லைத்தீவு, ஜன. 15

விடுதலைப்புலிகளின் முக்கிய ஆவணங்கள் சில முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் மேற்கு பகுதியில் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளன.

15



## பாலத்துள் பாய்ந்த உழவுஇயந்திரம்

முல்லைத்தீவு, ஜன. 15

முல்லைத்தீவு கோவில்குடியிருப்பு பகுதியில் புனரமைக்கப்பட்டுவரும் பாலத்தின் ஊடாக, நெல்வெட்டும் இயந்திரத்தை ஏற்றிச்சென்ற

15



பிறநாடுகள் போன்று

## இலங்கையில் மீண்டும் கொரோனா பெருகும்!

### விசேட மருத்துவ நிபுணர் எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 15

அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய நாடுகள் மற்றும் இந்தியாவைப் போன்று இலங்கையிலும் மீண்டும் கொரோனா பரவல் அதிகரிக்கக் கூடிய அச்சுறுத்தல் நிலைமை உள்ளது. எனினும், அந்த அச்சுறுத்தலுக்கு உள்ளாகாமலிருப்பதற்கு கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வது அத்தி

15

## நல்லூர்ப் பொங்கலில் கண்டிய நடனம்!

### மக்கள் அதிருப்தி!

யாழ்ப்பாணம், ஜன.15

யாழ்ப்பாணம், நல்லூரில் நேற்று நடத்தப்பட்ட தைப் பொங்கல் நிகழ்வு ஒன்று பௌத்த கலாசார கண்டிய நடனத்துடன்

15



## தீர்வுபற்றி நாங்கள் ஆராய குழப்புகின்றார் சுமந்திரன்

### குற்றஞ்சாட்டுகின்றார் சுரேஷ்

யாழ்ப்பாணம், ஜன. 15

இந்திய அரசு மூலம், தமிழ் மக்களின் உரிமைகளை முழுமையாகப் பெற்றுக் கொடுப்பதற்கான வழிமுறையைப் பற்றி நாங்கள் சிந்தித்துச்செயற்படும்பொழுது அதனை கேள்விக்குள்ளாக்கக்கூடிய வகையில் , வடிவேலு பாணியில்

15

## பொருளாதாரப்பின்னடைவு சட்டவாட்சிக்குப் பாதிப்பு!

### சட்டத்தரணிகள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 15

நாட்டின் பொருளாதார பின்னடவானது, பெரும்பாலும் நாட்டின் சட்டவாட்சிக்கும் நிர்வாகத்துக்கும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். இனியும் தாமதிக்கக்கூடாது என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளர் ரஜீவ் அமரசூரிய அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். அந்த அறிக்கையில், இலங்கையில் அதிகரித்துவரும் பொருளாதார

15

## குளித்த மாணவர்களை அள்ளிச் சென்றது கடல்

மட்டக்களப்பு, ஜன. 15

மட்டக்களப்பு கிரான் நாகவத்தை கடலில் நண்பர்களுடன் குளிக்கச்சென்ற இருவர் கடலில் மூழ்கி காணாமற்போயுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். கிரான் தேசிய பாடசாலையில்

15

## சில்லுக்குள் நசிந்து குடும்பஸ்தர் சாவு

யாழ்ப்பாணம், ஜன. 15

யாழ்ப்பாணம் புத்தூர் பகுதியில் உழுது கொண்டிருந்த குடும்பஸ்தர், உழவு இயந்திரம் புரண்டதால் சில்லுக்குள் நசியுண்டு உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் நேற்றுமதியம்

15

## மயங்கி வீழ்ந்த சிறுவன் சாவு

கொடிகாமம், ஜன. 15

மயங்கி வீழ்ந்த சிறுவன் சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில்உயிரிழந்தார் என்பது மருத்துவ பரிசோதனையில் தெரிய வந்தது.

15

சங்கானையில் -

## குளத்திலிருந்து சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், ஜன. 15

சங்கானையில் குளம் ஒன்றிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் நேற்றுமதியம் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்

15

Jaffna International Trade Fair
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
JITF 2022
21 22 23
ஜனவரி January
10.00am - 8.00pm
இன்னும் 6 நாட்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாணத்தில் 15 மினி கோப் சிற்றிகள்

## கூட்டுறவு ஆணையாளர் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம்,ஜன.15**

**வடக்கு மாகாணத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களை இணைத்து, 15 மினி கோப் சிற்றிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமான மு. நந்தகோபாலன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கில் கூட்டுறவுத் துறையை வினைதிறனாக்குவதற்கும் வியாபார கூடங்களை விருத்தியடையச் செய்வதற்கும் கூட்டுறவு இராஜாங்க அமைச்சின் ஊடாக தலா 5 லட்சம் ரூபா வீதம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போது இயங்கி வருகின்ற கூட்டுறவுச் சங்கங்களின் கோப் சிற்றிகளுடன் இணைந்து, வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகமினிகோப்சிற்றிகளை அமைக்க தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்காக குறித்த நிதி வழங்கப்படுகின்றது. எதிர்காலத்தில் இன்னும் பல திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படும் -என்றார். (ம-4-20)



# ஓட்டோக்களுக்கு பாதுகாப்புத் திரை

வவுனியா,ஜன.15

கொரோனாத் தொற்றிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு வவுனியாவில் சேவையில் ஈடுபடும் முச்சக்கர வண்டிகளுக்கு பாதுகாப்புத் திரை பொருத்தப்பட்டது.

வவுனியா பொலிஸாரின் ஒத்துழைப்புடன், தனியார் நிதி நிறுவனத்தின் பிரதான அனுசரணையுடன், முதலாம் குறுக்குத்தெரு வீதியில் தரித்து நிற்கும் முச்சக்கர வண்டிகளுக்கு பாதுகாப்புத் திரை பொருத்தப்பட்டது. (ம - 4-110)

# எரிபொருள் விலைகள் இன்னும் அதிகரிக்கும்!

## ஐ.ம.சக்தி எச்சரிக்கை

எதிர்வரும் நாள்களில் எரிபொருள்களைப் பெற்றுக் கொள்ளும்போது சர்வதேச விலையை விடவும் அதிக தொகை செலுத்தப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோது நாடாளுமன்ற உறுப்பினர் கபீர்ஹாசிம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

நாணய கடிதங்கள் வழங்கப்படாமையால் கொழும்புத் துறைமுகத்தில் உள்ள இரண்டு எரிபொருள் கப்பல்களுக்குத் தாமதக் கட்டணம் செலுத்த வேண்டிய நிலை அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளது.

கட்டணம் செலுத்தப்படும்வரை நாட்டுக்கு மருந்துப் பொருள்களை விநியோகிக்கப்போவதில்லை என்று சில இந்திய மருந்து நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

துறைமுகத்துக்கு வெளியே இரண்டு கப்பல்கள் எரிபொருளை இறக்கமுடியாமல் உள்ளன. டொலர் பற்றாக்குறை காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளது. டொலர் கையிருப்பில் உள்ளது என்று மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் கூறுகின்றார். அவ்வாறாயின் ஏன் கப்பல்களில் உள்ள எரிபொருளை இறக்க முடியாமல் உள்ளது.

அந்தக் கப்பல் நிறுவனங்களிடம் மீண்டும் இலங்கைக்கு எரிபொருளைக்கோரும்போது அதிக அளவில் கட்டணங்கள் அறவிடப்படும். இலங்கைக்கு எரிபொருள்களைக் கொண்டுவருவதற்கான செலவு அதிகரிப்பதன் காரணமாக அவர்கள் கட்டணத்தை அதிகரிப்பர். இதன் காரணமாகச் சர்வதேச விலையை விடவும் அதிக விலையில் நாட்டுக்கு எரிபொருளைக் கொண்டுவர நேரிடும் - என்றார். (எ-இ)



# பனைக்குற்றிகள் கடத்தல் பாரவூர்தி மடக்கிப்பிடிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 15

சட்ட விரோதமாக பனைமரக் குற்றிகளைக் கடத்திய பாரவூர்தியொன்று மடக்கிப் பிடிக்கப்பட்டது.

புங்குடுதீவு மடத்துவெளிப் பிள்ளையார் ஆலயத்துக்கு அருகாமையில், இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றது.

கண்டியைச் சேர்ந்த சந்தேகநபரே, இந்த சட்டவிரோதச் செயற்பாட்டை மேற்கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-4-20)

# உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் நடந்து 1,000 நாள்கள் நிறைவு!

கொழும்பு, ஜன.15



உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்கள் நடந்து நேற்றுடன் ஆயிரம் நாள்கள் நிறைவடைந்துள்ளன. கொழும்பு பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தலைமையில், சகல மறை மாவட்ட ஆயர்களின் பங்குபற்றலுடன் தேவத்தை தேசிய பெசிலிகா தேவாலயத்தில் நேற்று சிறப்பு ஆராதனைகள் இடம்பெற்றன.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இதுவரை காலமும் நியாயம் வழங்கப்படாமை, நாட்டில் மக்கள் பெரியளவில் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளமை மற்றும் பொருளாதார நெருக்கடிகள் என்பவற்றுக்கு தீர்வு கிடைக்க வேண்டும் என பிரார்த்தித்து விசேட ஆராதனை முன்னெடுக்கப்பட்டது.

குண்டுத் தாக்குதலுக்கு இலக்கான கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலம் மற்றும் நீர்கொழும்பு கட்டுவாப்பிட்டிய தேவாலயம் உள்ளிட்டவற்றின் அருட்தந்தையர் மற்றும் தாக்குதல்களால் பாதிக்கப்பட்டிருந்தவர்களும் இந்த விசேட ஆராதனையில் கலந்து கொண்டிருந்தனர். (எ-இ)

# உண்மையைச் சொல்லுங்கள் மக்கள் புரிந்துகொள்வார்கள்

கொழும்பு, ஜன. 15

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார பிரச்சினையின் உண்மைத் தன்மையை மக்களுக்கு வெளிப்படுத்துவது அரசின் கடமை. அப்போதுதான் மக்கள், நிலைமையை உணர்ந்து தேவையற்ற செலவுகளைக் குறைத்துக்கொள்ள முயற்சிப்பார்கள். ஆனால் அவ்வாறான நடவடிக்கையை அரசிடம் காண முடியாமல் இருக்கின்றது என்று ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார். (ஒ-இ)

# துறைமுகத்துக்கு வந்தன அரிசிக் கொள்கலன்கள்!

கொழும்பு, ஜன.15



தனியார் தரப்பால் இறக்குமதி செய்யப்பட்ட 500 அரிசிக் கொள்கலன்கள் நேற்றுமுன்தினம் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளன என்று வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது

வரி நிவாரணத்துக்கு அமைய இந்த அரிசித் தொகையைச் சந்தைக்கு விநியோகித்த பின்னர் அரிசியின் விலை குறைவடையும். செயற்கை விலை உயர்வைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. தற்போது அரிசி மோசடி இடம்பெறுகின்றது - என்றார். (எ-இ)

# பணிநயப்பு விழா

சாவகச்சேரி, ஜன. 15

மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபர் த.அம்பலவாணரின் பணி நயப்பு விழா இன்று முற்பகல் 10 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் பழைய மாணவர் சங்க உப தலைவரும் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக மாவட்டச் செயலருமான க.கனகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில், விழாநாயகனைக் கௌரவிப்பதோடு 'வாணர் தீபம்' என்ற மலர் வெளியீடும் இடம்பெறவுள்ளது. (ம-ரி-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினாதீவு விகாரை புனித பூமியாகிறது

## பிரதமர் பணிப்பு



**கொழும்பு, ஜன. 15**

**அரச வெசாக் விழாவுக்கு முன்னதாக நயினாதீவு ரஜமஹா விகாரையை புனித பூமியாக பிரகடனப்படுத்தவேண்டும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**

இம்முறை அரச வெசாக் விழா பலாங்கொட கூரகல வரலாற்று சிறப்புமிக்க தலத்தை மையமாகக் கொண்டு நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான கூட்டம் அலரிமாளிகையில் கடந்த 12ஆம் திகதி நடைபெற்றது.

'கடந்த ஆண்டு அரச வெசாக் விழாவை வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு ரஜமஹா விகாரையில் நடத்துவதற்கு நாம் தீர்மானித்திருந்தோம். ஆனால் கொவிட் தொற்று நிலைமைக்கு மத்தியில் சுகாதாரப் பிரிவின் ஆலோசனைக்கேற்ப பொதுமக்களின் சுகாதாரப் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு அதனை நடத்த முடியாதுபோனது. இம்முறை அரச வெசாக் விழாவுக்கு முன்னதாக நயினாதீவு ரஜமஹா விகாரையை புனித பூமியாக பிரகடனப்படுத்தி சன்னஸ் பத்திரத்தை வழங்கவேண்டும்.

அதற்கான நடவடிக்கைகளைக் காலம் தாமதிக்காது முன்னெடுக்கவும்' என்று பிரதமர் பணிப்புரை விடுத்தார். (ஒ-இ)

# உடன்படிக்கையை நிறுத்து வவுனியாவில் சுவரொட்டி

வவுனியா,ஜன.15

"தேசிய வளங்களை இந்தியாவுக்கு தாரைவார்க்கின்ற உடன்படிக்கையை சுருட்டிக்கொள்" என்ற வாசகத்துடனான சுவரொட்டிகள் வவுனியா நகரின் பல இடங்களில் ஒட்டப்பட்டுள்ளன. தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் ஒட்டப்பட்டுள்ள இந்தச் சுவரொட்டிக்கு, மக்கள் விடுதலை முன்னணி உரிமை கோரியுள்ளது. வவுனியாவில் கண்டி வீதி , நூலக வீதி , மன்னார் வீதி, ஹொரவப்பொத்தானை வீதி, புகையிரத நிலைய வீதி எனப் பல இடங்களில் சுவரொட்டிகளைக் காணமுடிந்தது. (ம-4,18)






## ACCOUNTS EXECUTIVE

We are looking for a suitable candidate for the above position in our company.

**REQUIREMENTS**

- G.C.E. (A/L), full / part qualifications from a recognized accounting body.
- Minimum 2 years working experience in a similar capacity,
- preferably in the mercantile sector with audit experience.
- Good command of English - both written and verbal
- Ability in preparation of financial statements in line with Sri Lanka Accounting standards, individuals & Company Income Tax computations.
- Sound knowledge in filing tax returns and preparing monthly budgets.
  Assisting sales & marketing team by preparing ad-hoc reports.
- Strong analytical, communication and computerized
- accounting skills - **"QuickBooks"** accounting system
- **Trustworthy, Honest & Positive Attitude.**

Salary:- Negotiable - Based on your qualifications & experience.

Interested candidates should forward their CVs with 2 non related referees.

Please forward your application to:
**mmslanka@gmail.com**


# தற்காலிக குடியிருப்பாளர்கள்; கொழும்பில் விவரம் திரட்டல்

கொழும்பு,ஜன.15

கொழும்பு நகரை அண்மித்த பகுதிகளில் தங்கியிருக்கும் அனைத்து தற்காலிக குடியிருப்பாளர்கள் தொடர்பான விவரங்கள் திரட்டப்படவுள்ளன.

வீடுகள், வர்த்தக நிலையங்கள், நிறுவனங்கள், அரச அல்லது தனியார் வளாகங்கள், கட்டுமான ஸ்தலங்கள் போன்றவற்றில் தற்காலிகமாக தங்கியிருப்பவர்கள் பற்றிய தகவல்கள் திரட்டப்படவுள்ளன.

இன்றும், நாளையும் இந்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்துள்ள னர்.

தேசிய பாதுகாப்பை உறுதி செய்து, கொழும்பு நகரில் குற்றச்செயல்கள் மற்றும் போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

தற்காலிகமாக தங்கியிருப்பவர்கள், தாங்கள் வசிக்கும் பகுதிகளில் கண்காணிப்பில் ஈடுபடும் பொலிஸ் அதிகாரிகளிடமோ அல்லது அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திலோ படிவம் ஒன்றைப் பெற்று தகவலை வழங்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4,இ)




'நாங்கள் வைச்சதுதான் இஞ்ச சட்டம். நாங்கள் இரு எண்டால் இருக்கோனும், போ எண்டால் போக வேனும். அப்பிடி இல்லாத ஆக்களை தண்ணியில்லாக் காட்டுக்கு இடமாற்றம் செய்து போடுவம்' எண்டதுதான் பாழுங்கனவுக் குருப்பின்ர கோட்பாடு. ஆனால் அந்தக் குருப்புக்குள்ள இப்ப விரிசல். அப்பா ஒரு பக்கமும், சித்தப்பா இன்னொரு பக்கமாவும் நிக்கிறதால கனவுக்கார எம்.பிக்கு என்ன செய்யிறதெண்டு தெரியாத நிலைமையாம்.

கிட்டடியில யாழ்ப்பாணத்தில உள்ள பெரிய அதிகாரியள் சிலருக்கு இடமாற்றம் வந்ததெல்லோ. அதுக்கு முழுமூச்சா நிண்டது சித்தப்பா தானாம். தனக்கு அடங்காமல் இருக்கிற அதிகாரியளுக்கு ஒரு பாடம் படிப்பிக்கிறன் எண்டு அவர் , கொழும்புக்கு ஓடிப்போய், கனபேரின்ர கால், கையில விழுந்து இந்த இடமாற்றத்துக்கு ஏற்பாடு பண்ணியிருந்தார். ஆனால், இந்த இடமாற்றம் கனவுக்கார எம்.பியின்ர அப்பாவுக்கு பிடிக்கேலை. ஆருக்கெல்லாம் இடமாற்றம் வந்திச்சோ அவைக்கெல்லாம் உடனேயே, அப்பா போன் போட்டு, 'நான் உதை நிப்பாட்டுவன், நீங்கள் யோசிக்க வேண்டாம்' எண்டு சொல்லிப் போட்டு அந்த அலுவலில இறங்கிட்டார். அதைப்பற்றியெல்லாம் முதலும் ஒருக்கா பட்சி உங்களுக்குச் சொன்னது நினைவிருக்குமெண்டு நம்பிறன். இப்ப பட்சி முன்னமே சொன்னமாதிரி, அந்த இடமாற்றம் கான்சல் ஆகிட்டுது. இதுக்குப் பிறகு கனவுக்கார எம்.பியின்ர அப்பாவுக்கும், சித்தப்பருக்கும் இடையில உள்ள விரிசல் இன்னும் பெருசாகிட்டாம்.

'அதெப்பிடி, நான் அவைக்கு இடமாற்றம் வாங்கிக் கொண்டுவர, இவர் ஏன் போய் நிப்பாட்டினவர்? அப்ப எனக்கு என்ன மரியாதை? இதுக்கெல்லாம் இருக்கு' எண்டு தனக்கு நெருக்கமானவைக்கு சொல்லியிருக்கிறார் சித்தப்பு. ஆனால் அப்பரின்ர கைதான் ஓங்கியிருக்காம் எல்லா இடமும். கச்சேரியில கூட, சித்தப்புவுக்கு நெருக்கமான ஆக்களை, ஒருங்கிணைப்புக்குழு அலுவலகத்தில இருந்து தூக்கிட்டினமாம். அதோட சித்தப்பு இடமாற்றம் குடுத்தே ஆகோனும் எண்டு கொண்டந்த பட்டியலில உள்ளவைக்கு 'இப்போதைக்கு அவைக்கு இடமாற்றம் குடுக்க வேண்டாம். அவையின்ர சேவை தேவை' எண்டு கச்சேரிப் பெரியவர் அந்தப் பட்டியலுக்கு கீழ கொமண்ட்ஸ் எழுதியிருக்கிறார். அதால 'எங்கட ஐயாவுக்கு இப்ப முதுகெலும்பு நிமிர்ந்திட்டுது' எண்டு கச்சேரியில உள்ளவை அவரை மரியாதையாப் பாக்கினமாம். ஒருபக்கமும் சாயாமல், நியாயமா வேலை செய்தால் மரியாதை தானாக் கிடைக்கும் தானே. அது கச்சேரிப் பெரியவர் விசயத்திலும் உண்மையாகிட்டு. இப்பிடி கச்சேரிப் பெரியவர்கூட சப்போர்ட் பண்ணாத விசயத்தை கொழும்பெல்லாம் அலைஞ்சு, திரிஞ்சு சாதிச்சுட்டு இடமாற்ற உத்தரவை வாங்கிக் கொண்டு சித்தப்பு வந்தால், அதைப் போய் கான்சல் ஆக்கினால் கோபம் வரத்தானே செய்யும்?

இப்பிடி அடுத்தவைக்கு இடமாற்றம் வாங்கிக் குடுக்கிறதுக்கும்,அதை கான்சல் பண்றதுக்கும் மாறி, மாறி அலைஞ்சு திரியிற கனவுக் கோஷ்டி, உந்த அலைச்சலை சனத்துக்கு ஏதும் நல்லது செய்யிறதுக்கு பாவிக்கலாமே?



\- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஆங்கிலத்தில் : சிறி கமகே
கொழும்பு ரெலிகிராப்
தமிழில் : சுதந்திரா

# ஆக்கபூர்வமான திட்டத்தால்தான் நாடு மீட்சியுறும்




நாட்டில் நிலவும் தற்போதைய நிலைமை தொடர்பாக வெளிவரும் செய்திகளில், மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறுபட்ட பிரச்சினைகள் பற்றி எதிர்க்கட்சிகள் விவாதிக்கின்றமையை தெளிவாகக் காணமுடிகின்றது. தீர்க்கப்படமுடியாததும், அனைவருக்கும் சாதகமாக முடிவுகளைப்பெற முடியாததுமான பிரச்சினைகளிலேயே இவ்வாறு அதிக கவனம் செலுத்தப்படுகிறது. ஆனால் இலங்கை விரைவாக பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணக்கூடிய நடவடிக்கைகளை எடுக்குமாயின், அதன் எதிர்காலத்தை செழிப்புமிக்கதாக மாற்றிக்கொள்ள வாய்ப்பு உள்ளது. இதனை செயற்படுத்துவதற்கு முன்னர் உண்மையில் எங்கே? என்ன தவறு நடந்தது? என்பவை பற்றிய தெளிவான புரிதலும், தற்போதைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இலங்கையிடம் உள்ள சிறந்த வளங்கள் எவை? என்ற புதிய மதிப்பீடும் அவசியமாகின்றது.

பொருளாதார வல்லுநர்கள், சமூக அறிவியலாளர்கள் தற்போது நாடு எதிர்கொள்ளும் பிரச்சினைகள் எவ்வாறு தோற்றம் பெற்றன, எவ்வாறு வளர்ச்சியடைந்தன என்பவை பற்றிய விவரங்களை வெளியிடுகின்றனரே அன்றி அவற்றைத் தீர்ப்பதற்கான வழிவகைகளை இனங்கண்டு வெளிப்படுத்துவதில் தாமதப் போக்கையே கடைப்பிடிக்கின்றனர்.

**சுற்றுலாத்துறை வீழ்ச்சியால் அந்நியச் செலாவணி இழப்பு**

இன்று நாட்டிலுள்ள முக்கிய பிரச்சினையாக சுற்றுலாப் பயணிகள் மற்றும் வெளிநாடுகளில் வேலை செய்பவர்கள் மூலம் பெறப்படும் வருமானம் குறைவடைந்துள்ளமையைக் குறிப்பிடலாம். இதனால் ஏற்பட்டுள்ள அந்நியச் செலாவணிப் பிரச்சினையால், கடனை உரிய தவணைக்கு செலுத்துவதில் அரசு சிக்கலை எதிர்கொள்கிறது. நிலைமையை சரிசெய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் நாட்டின் பொருளாதாரத்தையும், மக்களையும் பல வழிகளில் பாதிக்கின்ற தன்மையையே கொண்டுள்ளன. எரிவாயு விநியோகப் பிரச்சினை, உரப் பிரச்சினை இதற்குச் சிறந்த உதாரணங்களாகும். ஜனநாயக நாட்டில் மக்கள் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தம்மால் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற பிரதிநிதிகள் மூலம் தெரிவித்து தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றபோதும், இலங்கையில் நிலைமை முற்றிலும் வேறுபட்டதாகவே உள்ளது.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமை மூலம் ஆளும் வர்க்கத்தால் கட்டமைக்கப்பட்ட அரசியல் கலாசாரத்தின் தன்மை காரணமாக பிரதிநிதிகள்மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியாத நிலைமையே உள்ளது. பிரச்சினைகளை எதிர்நோக்கும் மக்கள் எம்.பி.க்களின் அலுவலகத்துக்குச் சென்று தமது பிரச்சினைகளைத் தெரிவிப்பதற்கும் தீர்வுகாண்பதற்கும் முன்வருவதில்லை.

இலங்கை தற்போது நிலைத்துநிற்க முடியாத பொருளாதார, சமூக மற்றும் அரசியல் பாதையில் பயணித்துக் கொண்டிருக்கின்றது.

உண்மையில், எந்தவொரு துறையிலும் முன்னேற்றத்துக்கான வாய்ப்புகளே இல்லாத படுகுழியைநோக்கி இலங்கை வேகமாக நகர்கிறது என்று விமர்சிக்கப்படுகின்றது.

பொருளாதாரம், அரசியல் கட்டமைப்பு, சமூக ஒழுங்கு மற்றும் சுற்றுச்சூழல் உட்பட பலதுறைகளில் இலங்கை மிகவும் நெருக்கடியான நிலையிலேயே உள்ளது.

இந்தச் சவால்களை எதிர்கொள்ள இலங்கையிடம் சில வகையான வளங்கள் மற்றும் வாய்ப்புகள் உள்ளன. உதாரணமாக ஆயுள்வேதம் மற்றும் மூலிகைச் சிகிச்சைகளை வெளிநாடுகளுக்கு அறிமுகப்படுத்தல், உயர்கல்வி, மருத்துவ சுற்றுலாவை ஒழுங்குபடுத்தல், உள்ளூர் பழங்களை ஏற்றுமதிசெய்தல் மற்றும் புவியியலில் இலங்கையின் இருப்பிடத்தின் முக்கியத்துவத்துக்கு ஏற்ப சுற்றுலாத் தலங்களை விரிவுபடுத்தல் போன்றவற்றின் மூலம் நாட்டுக்கு அந்நியச் செலாவணியை ஈட்டிக் கொள்ளக் கூடிய மிகப்பெரிய ஆற்றல் இலங்கையிடம் உள்ளது.





> இலங்கை தற்போது நிலைத்து நிற்கமுடியாத பொருளாதார, சமூக மற்றும் அரசியல் பாதையில் பயணித்துக்கொண்டிருக்கின்றது. உண்மையில், எந்தவொரு துறையிலும் முன்னேற்றத்திற்கான வாய்ப்புகளே இல்லாத படுகுழியை நோக்கி இலங்கை வேகமாக நகர்கிறது என்று விமர்சிக்கப்படுகின்றது.

**தவறான மக்கள் தெரிவும் பிரச்சினைக்குக் காரணம்!**

ஜனநாயகத்தின் அடிப்படையில், 'தகுந்த நபர்களை அரசியல் தலைவர்களாக தேர்ந்தெடுக்காதமையும்', இலங்கை எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்கான அடிப்படைக் காரணமாகவுள்ளது. அதுமட்டுமல்லாது மனோபாவம், நடத்தை ஆகியவற்றின் அடிப்படையில், சில அரசியல்வாதிகளின் குணங்கள் பேராசை, சுயநலம், மனிதர்கள், விலங்குகளின் உயிர்களை அலட்சியம் செய்யும் தன்மை போன்றவற்றால் மாற்றமடைந்துள்ளமையும் எம் நாட்டுக்கு ஏற்பட்ட பின்னடைவுக்கான காரணங்களாகும்.

அரசாங்கத்தினது முறையற்ற பொருளாதார நிர்வாகத்தின் விளைவாக, இலங்கையில் பெரும்பாலான மக்கள் வாழ்வதற்குரிய வருமான வழிகளை உருவாக்கவோ, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக்களை வழங்கவோ, விலை உறுதித்தன்மையைப் பேணவோ அல்லது போதுமான தேசிய சேமிப்பை உருவாக்கி அந்நியச் செலாவணியை ஈட்டவோ முடியாதுபோயுள்ளது. இந்தத் தோல்விகளால் இலங்கையின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த இயலாமல் போயுள்ளது. இதனால் பலரை வறுமை, ஏழ்மைநிலை ஆகியவற்றிலிருந்து மீட்டெடுக்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது.

**இலங்கைக்கான தேவைப்பாடு**

தற்போது நாட்டுக்குத் தேவைப்படுவது, எதிர்காலத்தில் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தைப் பெறுவதற்கான நீண்டகால தொலைநோக்குக் கொள்கைகளை வகுப்பதே ஆகும். அடுத்த 10 ஆண்டுகளில் நாம் எவ்வாறான நாட்டைப் பார்க்க விரும்புகிறோம் என்பது தொலைநோக்குப் பார்வையின் அடிப்படையில் கருத்தில் கொள்ளப்படவேண்டிய முக்கியமான கேள்வி. எடுத்துக்காட்டாக, ஒவ்வொரு குடிமகனின் உரிமைகளும் பாதுகாக்கப்பட்டு உத்தரவாதம் அளிக்கப்படும் ஒரு நாட்டை நாம் பார்க்க விரும்புகிறோமா? ஒவ்வொருவரும் அடிப்படை வருமானத்தைக் கொண்டவர்களாக உள்ள ஒரு சமூகத்தை நாம் பார்க்க விரும்புகிறோமா? அரசியல் தலையீடு இல்லாமல் செயற்படும் நிறுவனங்களை நாம் பார்க்க வேண்டுமா? அனைவரின் பாதுகாப்புக்காக சட்டத்தின் ஆட்சி மீண்டும் நிறுவப்படவேண்டுமா? இதை செயற்படுத்த என்ன சட்டச் சீர்திருத்தங்கள் தேவை? சிறந்த நாட்டைக் கட்டியெழுப்ப எமது சுகாதாரத் துறை எவ்வாறு இருக்கவேண்டும்? நாட்டின் பொருளாதாரத்தில் தனியார் சுகாதார சேவைகள் என்ன பங்கு வகிக்கின்றன? அதிக கட்டணம் வசூலிக்கும் தனியார் மருத்துவ ஆலோசனைகளை வழங்கும் மருத்துவர்களை அனுமதிக்க வேண்டுமா? உற்பத்தித் துறைகள் மிகவும் பயனுள்ளதாக வளர்ச்சியடைவதற்கு அரசாங்கத்தின் ஆதரவு என்ன? 21ஆம் நூற்றாண்டின் சவால்களை எதிர்கொள்ள என்ன வகையான கல்விமுறை அவசியம்? கல்வி முறையில் பாடத்திட்ட சீர்திருத்தம் வேண்டுமா? போன்ற கேள்விகளுக்கான விடைகள் கண்டறியப்பட வேண்டும். ஒரு முறையான உத்தி மற்றும் பரந்த சமூக ஈடுபாடு இல்லாமல் இதுபோன்ற கேள்விகளுக்கான பதில்களைக் காண முடியாது. அந்நியச் செலாவணி ஒரு முக்கிய பிரச்சினை என்றால், எதிர்காலப் பார்வை மற்றும் திட்டம் இந்தச் சிக்கலை தீர்க்கக்கூடியதாக அமையவேண்டும். பட்டதாரிகள் மத்தியில் திறமையின்மை ஒரு பிரச்சனையாக இருந்தால், அதை நிவர்த்தி செய்ய வேண்டும். விவசாயத்துறைக்கு உரம் ஒரு பிரச்சினை என்றால், அதற்கான தீர்வுகளைக் கண்டறிய வேண்டும்.

சுருக்கமாகச் சொன்னால், மக்கள் எதிர்கொள்ளும் பல சிக்கல்களைத் தவிர்த்து அடுத்த வரும் தசாப்தங்களில் வளர்ச்சிக்கான பார்வையையும், திட்டத்தையும் உருவாக்குவதற்கு அரசியல் மற்றும் பிற முக்கியத்துவம் வாய்ந்த தலைவர்களின் தலைமையில் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். சீனா உள்ளிட்ட பிற நாடுகள் அவ்வப்போது இத்தகைய முறைகளையே மேற்கொள்கின்றன. எமது நாடு எதிர்கொண்டிருக்கும் இந்த நெருக்கடிகள், விமர்சனங்கள் போன்றவை களையப்பட்டு ஆக்கபூர்வமான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் இந்த ஆண்டில் முன்னிற்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் தட்டுப்பாடு இந்த மாதம் ஏற்படும்!

## எரிசக்தி அமைச்சர் கம்மன்பில அபாயச் சங்கு ஊதுகிறார்



கொழும்பு, ஜன. 15

எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது என்று முன்னர் நான் கூறி வந்த போதும் இப்போதைய நிலைமையில் என்னால் அவ்வாறு உறுதியாகக் கூறமுடியாது. இந்த மாதத்தில் எவ்வேளையிலும் எரிபொருளுக்கான தட்டுப்பாடு ஏற்படுவதற்கான அபாயம் இருக்கின்றது என்று எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய எரிபொருள் நிலைமை தொடர்பாக குறிப்பிடுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

எரிபொருள் விநியோகத்தை விடவும் எரிபொருளுக்கான பணத்தைச் செலுத்துவதிலேயே பிரச்சினை உள்ளது. எரிபொருள் கப்பல்கள் 7, 8 நாள்களாக எரிபொருளை இறக்கமுடியாத நிலைமையில் இருக்கின்றன. வங்கிக் கடன் பத்திரங்கள் இன்றி எரிபொருள் கப்பல்களைக் கொண்டுவந்தாலும் அவற்றுக்குத் தேவையான டொலர்களை சேர்த்துக்கொள்ளும் வரை எரிபொருள் அடங்கிய கப்பல்களை துறைமுகத்தில் நிறுத்திவைக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது.

டொலர் பிரச்சினையை கட்டுப்படுத்திக்கொள்ள நாங்கள் சீனாவிடம் 300 மில்லியன் டொலர் கடனைப் பெற்றோம். இந்தியாவிடம் 400 மில்லியன் டொலரைப் பெற்றோம். பங்களாதேஷிடம் 250 மில்லியன் டொலரைப் பெற்றோம். ஆனால் அவை அனைத்தும் ஒரு மாதத்துக்கான எரிபொருளைக் கொண்டு வரப் போதுமானவை அல்ல.

நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் நெருக்கடிநிலைமையில் எரிபொருள் தொடர்பில் நான் இதற்கு முன்னர் உறுதிமொழி வழங்கியது போல் தற்போது என்னால் வழங்க முடியாது. அதற்காக அவசரமாகச் சென்று எரிபொருளை நிரப்பிக்கொள்ள வேண்டியதில்லை. எதிர்வரும் தினங்களுக்குத் தேவையான எரிபொருள் இருக்கின்றது. இதற்கு முன்னர் போன்று எரிபொருள் தொகை களஞ்சியத்தில் குறைவடைந்துள்ளது. எரிபொருள் முழுவதும் நிலையிலேயே இறக்குமதி செய்யப்படுகின்றது.

ஜனவரியில் எவ்வேளையும் எரிபொருள் பற்றாக்குறை ஏற்படக்கூடிய அபாயம் இருக்கின்றது. ஆனால் அந்த அபாயம் உருவாக முன்னர் அது தொடர்பில் மக்களுக்கு அறிவிக்க எதிர்பார்க்கின்றேன். அதற்காக தட்டுப்பாடு ஏற்படும்வரை நாங்கள் பார்த்துக்கொண்டிருக்கமாட்டோம்.

ஜனவரிக்குப் பின்னர் ஏதாவது நடவடிக்கை எடுக்கலாம். ஏனெனில் பெப்ரவரியில் ஒரு சில நாடுகளிடம் நான் கடன் வசதிகளைக் கேட்டிருக்கின்றேன் - என்றார். (ஒ-இ)

## கசிப்புடன் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 15

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரண்டு வெவ்வேறு பகுதிகளில், கசிப்பு விற்பனை மற்றும் கசிப்பை உடைமையில் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டனர்.

ஆனைக்கோட்டை மூன்றாம் கட்டைப் பகுதியில் கசிப்பு உற்பத்தி செய்து விற்பனையில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் ஒருவரும், ஆனைக்கோட்டை சாவற்கட்டுப் பகுதியில் கசிப்பு வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவரும் கைது செய்யப்பட்டனர். இருவருக்கும் எதிராக யாழ்பாண நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ம-4-125)

## 5 வருடங்களாக மூடப்பட்டுள்ள கணினிப் பயிற்சி நிலையங்கள்

யாழ்ப்பாணம், ஜன. 15

யாழ். மாவட்டத்தில் உள்ள நான்கு கல்வி வலயங்களிலும், மாணவர்களின் கணினிக் கற்கை நெறிக்காக நிர்மாணிக்கப்பட்ட பயிற்சி நிலையங்களின் கட்டட வேலைகள் பூர்த்தியடைந்து 5 வருடங்களாகியும், அவை மாணவர்களின் பாவனைக்கு இன்னும் கையளிக்கப்படவில்லை.

கல்வி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் இந்தப் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டன. இது தொடர்பாக வலயக் கல்வி அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டபோது, கட்டட வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட போதிலும் அதற்குரிய கணினி உள்ளிட்ட உபகரணங்கள் கிடைக்கப்பெறவில்லை. அதனால் பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவில்லை - என்றனர். (ம-4-9)

## மின் தடைக்கு சதியா காரணம்?

### விசாரணைக்கு பணிப்பு

கொழும்பு, ஜன. 15

மின் உற்பத்தி நிலையங்களில் ஏற்பட்ட கோளாறுகள் தொடர்பில் விசாரணை நடத்துமாறு பொலிஸ்மா அதிபரிடம் முறைப்பாடு கையளிக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

களனி திஸ்ஸ அனல்மின் நிலைய வளாகத்தில் இரண்டு மின் நிலையங்களில் டீசல் இல்லாததால் நாடு முழுவதும் மின் துண்டிப்பு இடம்பெற்றிருந்தது. இதன் காரணமாக 300 மெகா வோட் மின்சாரம் இழக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை மின்சாரசபை குறிப்பிட்டுள்ளது. இதுதொடர்பிலேயே விசாரணை நடத்தப் பணிக்கப்பட்டுள்ளது. (ஒ-இ)

## மின்சாரசபைக்கு எரிபொருள் வழங்குவதற்கு நடவடிக்கை!

கொழும்பு, ஜன.15

இலங்கை மின்சார சபையால் மூடப்பட்டுள்ள மின் உற்பத்தி நிலையங்களை பராமரிப்பதற்காக நாளொன்றுக்கு ஆயிரத்து 500 மெற்றிக் தொன் டீசல் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மீண்டும் நடைபெறவுள்ள கலந்துரையாடலின் பின்னர் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இனிக் கடன் அடிப்படையில் மின்சார சபைக்கு எரிபொருளை வழங்க முடியாது என முன்னர் தெரிவித்திருந்தது. தற்போது மின்சாரசபையின் கோரிக்கைக்கு அமைய இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது - என்றார்.

மின் உற்பத்தி நிலையங்களின் செயற்பாட்டுக்கு எரிபொருள் கிடைக்காத பட்சத்தில் எதிர்வரும் காலங்களில் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் என இலங்கை மின்சார சபை முன்னர் தெரிவித்திருந்தது.

மின் உற்பத்தி நிலையங்களுக்கு எரிபொருள் மற்றும் டீசல் தட்டுப்பாடு, நுரைச்சோலை அனல் மின்நிலையத்தில் மின்பிறப்பாக்கி செயலிழந்தமை மற்றும் நீர்மின் நிலையங்களின் நீர்மட்டம் குறைவடைந்தமை போன்ற காரணங்களால் தினசரி மின்சாரம் துண்டிக்கப் படுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. (எ-இ)

## ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் மன்னார் மாவட்டத்தில் கள ஆய்வு

மன்னார், ஜன. 15

ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள், மன்னார் மாவட்டத்தின் கள நிலைவரங்களை ஆராய்ந்தனர்.

மதங்களின் தலைவர்கள், அரசு சார்பற்ற பிரதிநிதிகள் மற்றும் சிவில் நிர்வாகப் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இராணுவத்தினின் சோதனை, சிறையில் வாடும் அரசியல் கைதிகள், காணி அபகரிப்பு உள்ளிட்ட மனித உரிமை நிலைவரங்களைக் கேட்டறிந்தனர். மன்னார் மருத்துவமனையின் தேவைகள், மன்னார் மாவட்ட இளைஞர் யுவதிகளின் வேலை வாய்ப்பு உள்ளிட்ட முக்கிய தேவைகள், சிவில் பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்டன.

தொடர்ந்து ஐரோப்பியக் குழுவினர், மன்னார் மாவட்டத்தில் ஒரு சில கிராமங்களுக்கும் சென்று, அங்குள்ள மக்களையும் நேரடியாகச் சந்தித்தனர். (ம-4-60)

## பண மோசடி; பெண் கைது

கொழும்பு, ஜன. 15

தொழில் பெற்றுத் தருவதாகக் கூறி பணமோசடி செய்தார் வரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில், சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம-4-இ)

## பொரளை தேவாலயத்தில் குண்டு மீட்பு; விசாரணை முடியவில்லை

கொழும்பு, ஜன. 15

பொரளை தேவாலயத்தில் கைக்குண்டு மீட்கப்பட்டது தொடர்பிலான விசாரணைகள் இன்னும் நிறைவடையவில்லை என்று பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

'சம்பவத்துடன் தொடர்புடைய சகல நபர்களுக்கும் எதிராக தகுதி தராதரம் பாராது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். பொரளை பொலிஸாரால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரால் தற்சமயம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தேவாலய வளாகத்தை அண்மித்த பகுதிகளில் இருந்து பெறப்பட்ட சிசிரிவி காட்சிகள் சட்டத்துக்கு உட்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும் ஆதாரங்கள் பதிவு செய்யும் பணிகளும் முன்னெடுக்கப் பட்டுள்ளன. சம்பவம் தொடர்பாக கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரால் இதுவரை 14 வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன' என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உதயன் பணிமனையில் நேற்றுக் காலை பொங்கல் கொண்டாட்ட முன்னெடுக்கப்பட்டது.











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் திருநாளாம் தைத் திருநாள் வடமாகாணத்தில் பல்வேறு இடங்களிலும் நேற்று சிறப்பானமுறையில் கொண்டாடப்பட்டது. யாழிலுள்ள ஆலயங்களில் அதிகாலை முதல் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன. வீடுகளிலும், சமய சமூகப் பொது நிறுவனங்களிலும் இடம்பெற்ற பொங்கல் கொண்டாட்டங்களில் மக்கள் உற்சாகத்துடன் பங்குபற்றினர்.

படங்கள்: ஐ.சிவசாந்தன், கூஞ்சு

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## நீதி நமக்கு எட்டாக்கனியே !

2012ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இடம்பெற்ற வெலிக்கடைச்சிறைச்சாலை படுகொலை தொடர்பில் ட்ரயல் அட்பார் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கின்றது. சிறைக் கலவரத்தின்போது கொல்லப்பட்ட கைதிகள் சார்பில் தொடுக்கப்பட்ட வழக்குக்கு அமைவாக அப்போதைய சிறைச்சாலை அத்தியட்சகர் எமில் ரஞ்சனுக்கு மரணதண்டனை வழங்கப்பட்டுள்ளது.

வெலிக்கடைச் சிறையில் ஏற்பட்ட கலவரத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த பின்னர் கலகத்துக்குக் காரணமானவர்கள் அல்லது அதிகாரத்தரப்பால் தீர்த்துக்கட்டப்படவேண்டியவர்கள் என்று பட்டியலிடப்பட்டவர்கள் கொல்லப்பட்டார்கள். இது தொடர்பான விசாரணைகள் நல்லாட்சி அரசின் காலத்தில் அதாவது 2017ஆம் ஆண்டே துரிதப்படுத்தப்பட்டு இப்போது தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதே ஆண்டு ஜூலை மாதம் வவுனியா சிறைச்சாலையில் இடம்பெற்ற கலவரத்தில் தமிழ் அரசியல் கைதிகள் மூர்க்கமாகத் தாக்கப்பட்டனர். அவர்கள் பல சிறைச்சாலைகளுக்கும் பகிரப்பட்டு பின்பு அங்கும் மூர்க்கமாகத் தாக்கப்பட்டதில் இரண்டு அரசியல் கைதிகள் உயிரிழந்தனர். வவுனியாவைச் சேர்ந்த நிமலரூபன், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த டில்ருக்சன் ஆகியோரே இவ்வாறு சாவடைந்திருந்தனர். ஆட்சிப்பீடம் இவர்களது சாவை இயற்கை மரணம் என்றே கூறியது. அவர்களது இறுதிக்கிரியைகளைக்கூட பாதுகாப்புத்தரப்பின் கெடுபிடிகளுடனேயே நடத்த வேண்டியிருந்தது.

வவுனியாவைச் சேர்ந்த நிமலரூபனின் தந்தையார் உயர் நீதிமன்றில் அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கைத் தாக்கல் செய்தார். வழக்கை அப்போதைய பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் தள்ளுபடி செய்தார். இந்த வழக்கு விசாரணைகளின்போது அவர் தெரிவித்த விடயங்கள் முக்கியமானவை.
மனுதாரர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணியைப் பார்த்து, 'கைதிகளால் சிறைச்சாலை முற்றுகையில் இருக்கும்போது சிறைச்சாலை ஆணையாளர் ஐ.நா. சாசனத்தை வாசிக்க வேண்டும் என்றா கூறுகிறீர்கள்?' என்று கூறப்பட்டது.

சித்திரவதை மேற்கொள்ளப்பட்டதால்தான் நிமலரூபனின் உடம்பில் காயங்கள் ஏற்பட்டுள்ளன என சட்டத்தரணி தெரிவித்தார். அதற்கு நீதியரசர், 'சிறை முற்றுகையிலிருந்து அதிகாரிகளைக் காப்பாற்ற பாலர் பாடசாலைச் சிறுவர்களை அனுப்பவில்லை. காயங்கள் ஏற்படுவது வழமை.'
'பிள்ளைகள் நன்றாக வளர்ந்திருந்தால், அவர்கள் இவ்வாறான காரியங்களில் ஈடுபட்டிருக்க மாட்டார்கள்.'
என்று மொஹான் பீரிஸ் தெரிவித்து வழக்கைத் தள்ளுபடி செய்திருந்தார்.

சிறைக்கலவரத்தின்போது கைதிகள் கொல்லப்பட்டால் அதனைக் கேள்விக்கு உட்படுத்த முடியாது என்பதே நிமலரூபன் விடயத்தில் நீதித்துறையின் வியாக்கியானமாக இருந்தது. ஆனால் அதே நீதித்துறை, வெலிக்கடைச்சிறைச்சாலையில் கொல்லப்பட்ட சிங்களக் கைதிகளுக்காக, சிறைச்சாலை ஆணையாளராக இருந்த ஒருவருக்கு தூக்குத் தண்டனை விதித்திருக்கின்றது.

சிறைச்சாலைக்குள் இருக்கும் கைதிகள் ஒவ்வொருவரையும் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கின்றது. ஆனால் மாற்றாந்தாய் மனப்பாங்கில் நடத்தப்படுவதால் தமிழ் கைதிகளுக்கு சிறைச்சாலைகள் எப்போதும் பாதுகாப்பானதாக இருப்பதில்லை. அங்கு தமிழ் கைதிகளுக்கு எது நடந்தாலும் தட்டிக்கேட்க முடியாது. இதுதான் இலங்கையின் வரலாறாக அமைகின்றது.
மிக அண்மையில் சிறைச்சாலைகள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, தமிழ் அரசியல் கைதிகளை முழந்தாளிட வைத்து துப்பாக்கியை நெற்றியில் வைத்து மிரட்டியதைக்கூட அதிகார வர்க்கம் கணக்கிலே எடுத்து விசாரிக்காது. தமிழர்களுக்கு நீதி எப்போதும் எட்டாக்கனிதான்.

## நாளொரு நல்வார்த்தை

"நீங்கள் இயற்கையை உண்மையாக நேசித்தால், நீங்கள் எல்லா இடங்களிலும் அழகைக் காண்பீர்கள்."–
வின்சென்ட் வான்கோ



# மனித உரிமை மேம்பாட்டுக்கு நம்பகமான உட்கட்டமைப்பு

## வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

**கொழும்பு, ஜன. 15**

**நல்லிணக்கத்தின் முன்னேற்றம் மற்றும் நாட்டின் சர்வதேசக் கடமைகளுக்கு இணங்க மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும், பாதுகாப்பதற்குமான நம்பகமான உள்நாட்டுக் கட்டமைப்பு குறித்து வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் ஹங்கேரிய வெளிவிவகார அமைச்சருக்கு தெளிவுபடுத்தியுள்ளார்.**



ஹங்கேரிய வெளியுறவு மற்றும் வர்த்தக அமைச்சர் பீட்டர் சிஜார்டோவுடன் நடைபெற்ற இருதரப்பு சந்திப்பிலே இது குறித்து அவதானம் செலுத்தப்பட்டது. இந்தச் சந்திப்பின்போது, இலங்கை - ஹங்கேரி இருதரப்பு உறவுகளை முடிவு சார்ந்த, பலதரப்பட்ட பங்காளித்துவமாக மாற்றுவதற்கான இலங்கையின் தீவிரமான ஆர்வத்தை வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் வெளிப்படுத்தினார்.
இருதரப்பு ஆர்வமுள்ள பல துறைகள் குறித்து இரு அமைச்சர்களும் ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களில் ஈடுபட்டனர். எஞ்சியிருக்கும் நல்லிணக்கப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் ஹங்கேரியின் அணுகுமுறையைப் பாராட்டிய அமைச்சர் பீரிஸ், நல்லிணக்கத்தின் முன்னேற்றம் மற்றும் நாட்டின் சர்வதேசக் கடமைகளுக்கு இணங்க மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும், பாதுகாப்பதற்கும் உள்ள நம்பகமான உள்நாட்டுக் கட்டமைப்புக் குறித்தும் ஹங்கேரிய அமைச்சருக்குத் தெரிவித்தார்.
ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் நாடுகளில் ஹங்கேரியும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.(ஒ-இ)

# கூலர் கவிழ்ந்தது: இருவர் படுகாயம்

மன்னார் பேசாலைப் பகுதியில் இருந்து மீன்களை ஏற்றிச் சென்ற கூலர் ரக வாகனம், மருத்துவமனைச் சந்தி சுற்றுவட்டப் பகுதியில் உள்ள கடைகளுடன் மோதுண்டு கவிழ்ந்தது. இந்த விபத்து மன்னார் மருத்துவமனைச் சந்தியில் நேற்று முன்தினம் நள்ளிரவு இடம்பெற்றது.



விபத்தில் பெண் தலைமைத்துவ குடும்பம் ஒன்றின் விற்பனை நிலையம் முற்றாகச் சேதமாகியது. அருகில் இருந்த சில கடைகளும் சேதமடைந்தன. விபத்தில் சாரதி மற்றும் உதவியாளர் காயமடைந்தனர். இருவரும் மன்னார் பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
(ம-4-213-56-125)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஒமிக்ரோனுக்கு புதிய தடுப்பூசி

நியூயோர்க், ஜன.15

ஒமிக்ரோன் வைரஸ் தொற்றுக்கு எதிராக தமது நிறுவனம் புதிய தடுப்பூசியைத் தயாரித்து வருகிறது எனவும் எதிர்வரும் மார்ச் மாதம் அதன் பணி நிறைவடையும் எனவும் அமெரிக்காவின் பைஸர் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து பைஸர் நிறுவனத்தின் தலைமைச் செயற்பாட்டு அதிகாரி தெரிவிக்கையில்

" புதிதாகக் தயாரிக்கப்படும் தடுப்பூசி செயலாற்றும் வேகம், திறன் ஆகியவை குறித்த தகவல்கள் இனிவரும் காலங்களில்தான் தெரியவரும். அத்துடன் தற்போது பயன்பாட்டில் இருக்கும் தடுப்பூசிகள் ஒமிக்ரோனுக்கு எதிராக நியாயமான பாதுகாப்பை கொடுத்தாலும், ஏற்கனவே தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்களுக்கு தொற்று பாதிப்பு ஏற்படுவதைத் தடுக்க, பிரத்தியேக தடுப்பூசி தயாராகி வருகிறது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 04.04.1951
மறைவு 16.12.2021

அமரர் சின்னத்துரை தியாகலிங்கம் (அரியம்)
(கட்டட ஒப்பந்தகாரர்)

எங்கள் குடும்பத்தின் வழிகாட்டியாயிருந்து ஆதரித்த
எம் அன்புத் தெய்வமே!
கால சூழலில் கலந்து போன - எங்கள் நீல வானில்
கலங்காத எம் சூரியனே!
உம் அன்பை தோற்கடிக்கும் மற்றொரு அன்பை
இவ்வுலகில் எமக்காரும் தரப்போவதில்லை உம்மைத் தவிர...
உமது பாசங்களின் அரவணைப்பை இனி
நிழல்களில் நீள நினைத்திருப்போம்
என்றும் உங்கள் நினைவுடன் 31 நாட்கள் கடந்தனவே...
எங்கள் உள்ளங்களில் நீங்கள் நினைவாய் நின்று வழிகாட்டுவீரே

கடந்த 16.12.2021 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம் சின்னத்துரை தியாகலிங்கம் (அரியம்) அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (15.01.2022) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நவாலி வடக்கு,
மானிப்பாய்

(CS 1129) (3.6)

குடும்பத்தினர்
0777786654

# 'மகாவா' எலி மறைந்தது

## சோகத்தில் கம்போடியா



கம்போடியா, ஜன.15

தென்கிழக்கு ஆசிய நாடுகளில் ஒன்றான கம்போடியாவில் கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்த 'மகாவா' என அழைக்கப்படும் எலி உயிரிழந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாள்களாக உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டிருந்த 'மகாவா' தனது 8 ஆவது வயதில் உயிரிழந்துள்ளது.

அபார மோப்ப சக்திகொண்ட இந்த எலியானது இதுவரை சுமார் 100 கண்ணிவெடிகளைக் கண்டுபிடித்துக் கொடுத்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இதன் மிகச் சிறப்பான பணியை அங்கீகரிக்கும் விதமாக பிரித்தானியாவின் விலங்குகள் நல அமைப்பு, மகாவாவுக்கு தங்கப்பதக்கம் வழங்கி கௌரவப்படுத்தியமை குறிப்பி டத்தக்கது. (ச)

# கர்நாடக விபத்தில் 7 பேர் உயிரிழப்பு

கர்நாடகா, ஜன.15

கர்நாடகத்தின் தவனாகரே மாவட்டத்தில் ஏற்பட்ட வீதி விபத்தில் சம்பவ இடத்திலேயே 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

கர்நாடக மாநிலத்தின் தவனாகரே மாவட்டத்தில் தேசிய நெடுஞ்சாலைப் பகுதியில் கட்டுப்பாட்டை இழந்த கார் விபத்துக்குள்ளானதில் காரில் பயணித்த 7 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

மேலும், விபத்தில் காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கார் சாரதி மது அருந்திவிட்டு வாகனத்தைச் செலுத்தியமையே விபத்துக்குக் காரணம் என விசாரணையில் தெரியவந்துள்ளது. (ச-இ)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** பணப்புழக்கம் உயரும். தள்ளிப்போன பயணம் இன்று அமையும். எதிர்பாராத நிகழ்வுகளால் மனதில் புத்துணர்ச்சி பெறுவீர்கள். சிரமமான நேரத்தில் நண்பர்கள் உதவிகரமாக இருப்பார்கள்.

**இடபம்:** சேமிப்பில் ஆர்வம் கூடும். குழந்தைகளால் மகிழ்ச்சி ஏற்படும். குடும்பத்தில் ஆரோக்கியமான விவாதங்கள் வந்து போகும். சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள்.

**மிதுனம்:** நல்ல காரணங்களுக்காக செலவுகள் அதிகரிக்கலாம். விருப்பத்துக்குரியவரின் எண்ணங்களை நிறைவேற்றுவீர்கள். சம்பள உயர்வு சந்தோஷச் செய்தி கிடைக்கும்.

**கடகம்:** தாயாரின் உடல்நிலை குறித்து இருந்து வந்த பயம் தீரும். உங்களது பொறுப்புகளை மற்றவர்களிடம் ஒப்படைக்க வேண்டாம். ஆயில்யம்: பெண்கள் குடும்ப நலனில் மிகுந்த அக்கறை கொள்வர்.

**சிம்மம்:** எதிர்பாராத நன்மையை அடைவீர்கள். உங்களது செல்வாக்கு அதிகரிக்கும். வரவு அதிகரிக்கும். நற்செய்தி ஒன்று உண்டு. மகிழ்ச்சி கூடும். செலவுகள் குறைய ஆரம்பிக்கும்.

**கன்னி:** நல்ல வகையிலான செலவு அதிகரிக்கும். பயம் நீங்கும். வாகனம் ஓட்டும்போது கவனம் தேவை. நட்பு [illegible] யால் மனதில் இருந்த குழப்பம் தீரும். பணப்புழக்கம் சுமாராக இருக்கும்.

**துலாம்:** எதிர்பாராத பணவரவு உண்டு. தந்தைக்கு அதிர்ஷ்டம் ஏற்படும். செயலில் கவனம் தேவை. குழந்தைகளின் போக்குப் பற்றி பயம் வரும். வழக்குகளில் வெற்றி கிடைக்க தாமதமாகும். கலையார்வம் வரும்.

**விருச்சிகம்:** வாகனம் ஓட்டும்போது கவனம் தேவை. சேமிப்பில் ஆர்வம் கூடும். வெளிநாட்டில் உள்ளவர்களுக்கு சுபச்செய்திகள் தேடிவரும். எதிரிகளின் தொல்லை ஒழியும். பங்குவர்த்தகம் லாபத்தைத் தரும்.

**தனுசு:** நீண்ட நாளாக பணியிடத்தில் இருந்து வந்த சிக்கல் ஒன்று தீரும். புதிய வாய்ப்பு உங்களைத் தேடி வரும். எதிர்பாராத பணவரவு உண்டு. வீட்டில் சுபநிகழ்ச்சிக்கான முயற்சி நடைபெறும். மகிழ்ச்சி கூடும்.

**மகரம்:** உங்களது முயற்சிக்கு வெற்றி கிடைக்கும். கஷ்டம் தீரும். சொன்ன சொல்லைக் காப்பாற்றி பிறரிடம் பாராட்டுப் பெறுவீர்கள். உங்கள் உதவியால் உறவினர் ஒருவரின் திருமணம் கூடிவரும்.

**கும்பம்:** மகன், மகளுக்கு இருந்து வந்த கவலைகள் அனைத்தும் தீரும். குழந்தைகளைப் பற்றி எதிர்பார்த்திருந்த சுபச்செய்திகள் தேடிவரும். உடல் ஆரோக்கியம் மேம்படும். திடீர் யோகம் உண்டாகும்.

**மீனம்:** மாணவர்களுக்கு படிப்பு விஷயங்களில் இருந்த குழப்பம் நீங்கும். பெண்கள் ஆடை, ஆபரணங்கள் வாங்கி மகிழ்ச்சி அடைவர். பணியாளர்களின் முயற்சி வெற்றி பெறும். குழந்தைகளால் நன்மை உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சு.க. வெளியேறினால் அரசு கவிழ்வது உறுதி

## மைத்திரி எச்சரிக்கை

**கொழும்பு, ஜன. 15**

**ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி கூட்டு அரசில் பிரதான வகிபாகத்தை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வகிக்கின்றது. இந்த அரசிலிருந்து சுதந்திரக் கட்சி வெளியேறினால் அரசு கவிழ்வது உறுதி என்று கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.**

அரசின் கொள்கைகள் பிடிக்கவில் லையெனில் சுதந்திரக் கட்சி கௌரவமான முறையில் வெளியேற வேண்டும் என்று அமைச்சர் நாமல் ராஜபக்ச தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், பொதுஜன முன்னணியில் இருந்து கொண்டு எமக்குச் சவால் விடும் சிறியவர்களும், பெரியவர்களும், சுதந்திரக் கட்சியிலிருந்துதான் அரசியலை ஆரம்பித்தனர். சுதந்திரக் கட்சிதான் அவர்களின் அரசியல் வாழ்வுக்கு முகவரி கொடுத்தது. இதை மறந்து அவர்கள் செயற்படுகின்றனர். கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும், பொதுத்தேர்தலிலும் கூட்டணி வெற்றியடைய சுதந்திரக் கட்சியே பிரதான காரணம் - என்றார்.

(ம-4-இ)



# நீர் சுத்திகரிப்புஇயந்திரம் இயக்கி வைப்பு

மன்னார், ஜன. 15

மன்னார் மாவட்டச் செயலக வளாகத்தில் நிறுவப்பட்ட தண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரம், நேற்று முன்தினம் புதன்கிழமை மாவட்டச் செயலர் நந்தினி ஸ்ரான்லி டிமெலால் இயக்கி வைக்கப்பட்டது.

நிகழ்வில், மேலதிக மாவட்டச் செயலர் கே.எஸ்.வசந்தகுமார், மாவட்டச் செயலக பிரதம கணக்காளர் எம்.செல்வரத்தினம், மாவட்டச் செயலக கணக்காளர் செல்வகுமார், உதவி மாவட்டச் செயலர் சிவராஜா, கிளைத் தலைவர்கள், மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(ம-ரி1-60)

# மருத்துவக் கருத்தமர்வு

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகின் ஏற்பாட்டில், பிரதி சனிக்கிழமை தோறும் மாலை 7 மணி தொடக்கம் 9 மணி வரை சூம் செயலி ஊடாக இடம் பெற்று வரும் 'யாவர்க்கும் நலம்' என்ற மருத்துவக் கருத்தமர்வின் இந்த வாரக் கருத்தமர்வு, 'சிறுநீரக சனனித் தொகுதி நோய்கள்' எனும் தலைப்பில் இன்று நடைபெறவுள்ளது.

சூம் செயலி இலக்கம் 89985282023, கடவுச்சொல் 354485 ஊடாக கருத்தமர்வில், அனைவரையும் பங்கேற்று பயன்பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

(ம-ரி1)


யாழ்ப்பாண மாநகர சபை முதல் முறையாக முன்னெடுக்கும்

முத்தமிழ் விழா

தை திங்கள் 16 காலை 8.30 மணி முதல்
நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில்

விருது வழங்கல் இயல், இசை, நாடக அரங்குகளில்..

இயல், இசை, நாடகத் துறைகளில் பெரும் பங்காற்றியவர்களுக்கான 'அரசகேசரி' விருது


கவிஞர் சோ.பத்மநாதன்


'இசைவாணர்'
முத்துக்குமாரு கோபாலகிருஷ்ணன்
(கண்ணன்)


"அண்ணாவியர்"

இயல் அரங்கு காலை 8.30 முதல் 1 மணிவரை



கம்பவாரிதி ஜெயராஜ் குழுவினரின்
நீதி ஆயம் (வழக்காடு மன்றம்)
"இன்றைய உலக நடைக்கு பொருந்தாத அறங்களை வகுத்துக்கந்த வள்ளுவர் குற்றவாளி"

இசை அரங்கு மாலை 3.30 முதல் 7.00 மணிவரை



நாத சங்கமம்
"ஈழநல்லூர் நாதஸ்வர கானவினோதன்"
P.S. பாலமுருகன்
"நாதஸ்வர இளவரசன்"
K.P. குமரன் பஞ்சமூர்த்தி குழுவினர்

இசை ஆராதனை
ஈழத்தின் புகழ்பூத்த
மூத்த இளைய இசைக்கலைஞர்கள்
இணைந்து வழங்கும் இசைச் சங்கமம்



நாடக அரங்கு மாலை 7.00 முதல் 10.00 மணிவரை

யாழ்ப்பாண நாட்டார் வழக்கியல் கழகம் பெருமையுடன் வழங்கும்
சத்தியவான் சாவித்திரி - இசை நாடகம் -

பாசையூர் புனித அந்தோனியார் கலைக்கழகம் பெருமையுடன் வழங்கும்
கலாபூசணம் பி.யூல்ஸ்கொலின் நெறியாள்கையில்
வீரபாண்டிய கட்டப்பொம்மன்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

யாழ்.மாநகர சபை

விழா இணை அனுசரணை ReeCha

IBC தமிழ் அனுசரணையில்


# 2 ஆயிரம் பேருக்கு பொலிஸார் எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 15

மேல் மாகாணத்தில் உரிய முறையில் முகக்கவசம் அணியத் தவறிய குற்றச்சாட்டுக்காக நேற்று முன்தினம் 2 ஆயிரத்து 21 நபர்களுக்கு பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

(ஒ-இ)



கைதடி நாவற்குழி அ.த.க பாடசாலையில் இடமாற்றம் மற்றும் ஓய்வு பெற்றுச் சென்ற ஆசிரியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு, நேற்றுமுன்தினம் புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. அதிபர் இ.கோகுலராகவன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்களான ரா.ராணிமலர், மோ.சத்தியகீர்த்தி, செல்வராணி ஆகியோருக்கு நினைவுப் பரிசில்களும் ஓய்வு பெற்றுச் சென்ற ஆசிரியர் திருமதி ஞா.மரியநாயகத்துக்கு நினைவுப் பரிசில் மற்றும் வாழ்த்துமடல் என்பனவும் வழங்கப்பட்டன.

(ம-ரி1-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரின் கலைமுகவரியாகத் திகழ்ந்த கலைஞர் குழந்தை

■ அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார்



கலைஞர் குழந்தை' என்றும் 'குழந்தை மாஸ்ரர்' என்றும் அறியப்படும் மன்னார் முருங்கனைச் சேர்ந்த செபஸ்தியான் செபமாலை கடந்த 8ஆம் திகதி இரவு தன் கலைவாழ்வில் இருந்து விடைபெற்று இறையடி சேர்ந்தார். இவர் மன்னாரின் கலைமுகவரியாகவும், ஈழத்தில் நன்கு அறியப்பட்ட கலைஞராகவும் திகழ்ந்தவர். இவர் 1940ஆம் ஆண்டு பங்குனி மாதம் எட்டாம் திகதி முருங்கனில் ஒரு கலைக்குடும்பத்தில் பிறந்தார். ஓர் ஆசிரியராக 40 ஆண்டுகள் பணியாற்றி ஓய்வுபெற்றார்.

### பன்முக ஆளுமை கொண்டவர்

இவர் சிறுவனாக வளந்த முருங்கன் கிராமச்சூழல் இவருக்கு கூத்து நாடகத்தின்மேல் ஈர்ப்பை ஏற்படுத்தியது. பள்ளிக்காலம், ஆசிரியப் பயிற்சிக்காலம் ஆகியவற்றில் இவருடைய கலையார்வம் அதிகரித்தது. இவர் மன்னார் மாதோட்டத்தைச் சேர்ந்த நாடகக் கலை முன்னோடியாக இருப்பினும் மன்னார் மாதோட்டத்தைக் கடந்து இலங்கை நாடு அறிந்த ஒரு கலைஞராகத் திகழ்ந்தார். மன்னாரில் எங்கெங்கு பொதுவிழாக்கள் நடக்கின்றனவோ அங்கெல்லாம் தம் இசையால், நடிப்பால், குரல்வளத்தால் நிகழ்வுகளைச் சிறப்பித்தார்.

இவர் கலைத்தாயின் பன்முகத் தன்மைகளை தன்னகத்தில் தாங்கிய ஒரு கலைச்சிற்பி. சிறந்த குரல்வளமுள்ள பாடகர், சிறந்த மேடைப்பேச்சாளர், நாடக நடிகர், நாடக எழுத்தாளர், நாடக நெறியாளர், பாடலாசிரியர், இசையமைப்பாளர், கவிஞர், கலைஞர், பேச்சாளர் என கலை இலக்கியத் துறையில் பன்முக ஆளுமையைக் கொண்டு விளங்கினார். தனது விடா முயற்சியாலும், தொடர் பயிற்சியாலும், அர்ப்பணிப்பாலும் இத்திறமைகளை அவர் வளர்த்துக்கொண்டார். கலைசார்ந்த ஆளுமையைவிட இவர் சமய வாழ்விலும் சமூக அரசியல் வாழ்விலும் காத்திரமான பங்கு வகித்துள்ளார்.

### பேராசிரியர் வித்தியானந்தனோடு தொடர்பு

1965களில் மன்னார் மாதோட்டத்தில் நாடக விழாக்கள் நடந்தேறிய பொற்காலம் எனலாம். இக்காலத்தைப்போல வேறு எக்காலத்திலும் இதுவரை நாடக விழாக்கள் நடக்கவில்லை. இக்காலத்தில் பேராசிரியர் சு.வித்தியானந்தன் நாடக விழாக்களை முன்னெடுக்க மன்னார் மாவட்டச் செயலராக இருந்த தேவநேசன் நேசையா பேராசிரியருக்கு உறுதுணையாக இருந்தார். இந்தச் சூழலில்தான் பேராசிரியர் சு.வித்தியானந்தன் குழந்தை செபமாலையையும் அவரின் முருங்கன் முத்தமிழ் கலாமன்றத்தையும் சந்தித்தார். இதன் விளைவாக யாழ்ப்பாணம், துணுக்காய், பளை, மட்டக்களப்பு, கொழும்பு எனப் பல பாகங்களுக்கு கலைஞர் குழந்தையையும் முருங்கன் முத்தமிழ் கலாமன்றத்தினரையும் அழைத்து நாடகங்களை ஆற்றுகை செய்தார்.

### முத்தமிழ் கலாமன்றம்

கலைஞர் குழந்தை அவர்கள் 1964இல் 'முருங்கன் முத்தமிழ் கலாமன்றம்' என்ற அமைப்பை ஏற்படுத்தினார். ஐம்பது ஆண்டுகளைக் கடந்தும் இன்றுவரை இம்மன்றம் இயங்குநிலையில் செயற்பட்டுக்கொண்டு இருக்கின்றது. இம்மன்றத்தின் தாபகத் தலைவர் கலைஞர் குழந்தை இம்மன்றத்தின் ஊடாக பல்வகையான கலைப்படைப்புக்களை உருவாக்கி மேடையேற்றியுள்ளார்.



### கலைப் படைப்புக்கள்

இவர் சுமார் 70 நாடகங்களையும், 90 கல்வெட்டுக்களையும், 100 இற்கும் மேற்பட்ட பல்துறைப் பாடல்களையும் எழுத்துப் பிரதிகளாக இன்றும் வைத்திருக்கின்றார். இவர் எழுதிய நாடகங்களுள் கூத்து நாடகங்கள், இசை நாடகங்கள், சமூக விழிப்புணர்வு நாடகங்கள் போன்றவை அடங்கும். ஏறக்குறைய ஒரு மணித்தியாலத்தைக் கொண்ட பல குறுங்கூத்துக்களை எழுதியுள்ளார். விவிலியம், தமிழ் இலக்கியம், வரலாறு போன்றவற்றில் இருந்து நாடகங்களுக்கான பாடுபொருளை தெரிவுசெய்து சமூக வாழ்வுக்கு படிப்பினையாக அவற்றை உருவாக்கி ஆற்றுகை செய்வார். கல்சுமந்த காவலர்கள், வீரத்தாய், யார் குழந்தை, இறைவனா புலவனா?, வீரனை வென்ற தீரன் போன்ற கூத்து நாடகங்கள் பல நூறு மேடைகள் கண்ட அழியாப்புகழ்கொண்ட படைப்புக்களாகும்.

### அர்ப்பணம் மிகுந்த கலைஞர்

தான் பணியாற்றிய இடங்களில் ஆசிரியப் பணியுடன் சமூகப்பணி, சமயப் பணி, தமிழ்ப்பணி போன்றவற்றில் இளமைக்காலம் தொடக்கம் இடைவிடாமல் 60 ஆண்டுகளாக உழைத்து வந்தவர்.

நல்லாசிரியராக, ஆற்றல்மிகு கூத்துக்கலைஞனாக, சிறந்த சமூக, இலக்கிய, விவிலிய நாடக இயக்குநராக, சமூக ஈடுபாடுள்ளவராக, இலக்கிய ஆர்வலராக, தான் வாழ்ந்த சமூகத்தின் கல்வி முன்னோடியாக, விசுவாசமான கத்தோலிக்கராக இவர் தமது வாழ்வை அர்ப்பணித்தவர். மொழிப்பற்றும், இனப்பற்றும், சமயப்பற்றும் இவருடைய படைப்புக்களில் இழையோடி இருக்கும்.

சமய, சமூக, கலைப் பணிகளை கடந்த 50 ஆண்டுகளாக அர்ப்பணிப்போடு ஆற்றவந்த இவர் உண்மையில் ஒரு வாழ்நாள் சாதனையாளர்தான்! இவருடைய அர்ப்பணிப்பும் தியாகமும் அளவிட முடியாதவை என்றால் அது மிகையான வார்த்தையில்லை.

# பொங்கல் என்பது வெறும் பண்டிகை அல்ல; தமிழ்ப் பண்பாட்டைக் கட்டிக்காப்பதற்கான வேட்கை

## பொங்கல் வாழ்த்துச் செய்தியில் பொ. ஐங்கரநேசன்



தமிழ் மக்கள் தங்கள் வாழ்வில் எத்தனையோ பண்டிகைகளைக் கொண்டாடி வருகின்றனர். இவற்றுள் பெரும்பாலானவை மதம் சார்ந்தவையாகவும், அவர்களிடையே ஏற்றத்தாழ்வுகளை வெளிப்படுத்துபவையாகவும் அமைந்துள்ளன. ஆனால், தைப்பொங்கல் மட்டும் சாதி, மத, பொருளாதார பேதங்களைக் கடந்து ஒட்டுமொத்தத் தமிழர்களுக்கும் பொதுவான பண்டிகையாகக் கொண்டாடப்படுகிறது. இது வெறும் பண்டிகை அல்ல. தமிழ்ப் பண்பாட்டைக் கட்டிக்காப்பதற்கான வேட்கை என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் பொங்கல் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

பொங்கல் வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தமிழ்மக்கள் இயற்கையைக் கடவுளாகப் பூசித்த தொல்வழிபாட்டுப் பண்பாட்டைக் கொண்டிருந்தவர்கள்.

அதன் தொடர்ச்சியாகவே மாரி [illegible] டையில் பொங்கல் செய்து சூரியனுக்குப் படைக்கும் பண்பாட்டு வெளிப்படுத்துகையாகக் தைப்பொங்கல் அமைந்துள்ளது.

தமிழ் மக்கள் தங்களைப் போன்றே இயற்கையை நேசிக்கும் பண்பாட்டு மரபைக் கொண்டிருந்தவர்கள். அதன் தொடர்ச்சியாகவே அவர்களோடு உணவு உற்பத்தியில் உழைத்த காளைகளுக்கும் பொங்கல் செய்து படைக்கும் பண்பாட்டு நீட்சியாகப் பட்டிப் பொங்கலைக் கொண்டாடுகிறார்கள்.

ஆனால், இன்று நயத்தகு பண்பாட்டுக்குச் சொந்தக்காரர்களான தமிழ் மக்கள் இந்தத் தையிலாவது பௌத்த சிங்களப் பண்பாட்டு மேலாதிக்கத்தில் இருந்துவிடுபட வழிபிறக்காதா என்று அங்கலாய்த்திருக்கின்றனர்.

பொங்கல் வாழ்த்துச் செய்திகளை அடுத்தவர்களுக்குப் பரிமாறும் இவ்வேளையில் தமிழ் மக்களின் சுதந்திர மானதும் சுபீட்சமானதுமான வாழ்வுக்கு வழிபிறக்கச் செய்ய இயற்கை என்ற பேரிறைவனை வேண்டி நிற்போமாக - என்றுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமையலாள் தேவை

4 பேர்கொண்ட குடும்பம் ஒன்றுக்கு தங்கி சமையல் வேலைசெய்ய கூடிய பெண் ஒருவர் தேவை.
சம்பளம் 30000.00 வழக்கப்படும்.

தொடர்பு:
**071 411 5000**

(CR 5662) 1-6

## தவறவிடப்பட்டுள்ளது

கோவில் வீதி. கிளிகடை சந்தியிலிருந்து தனங் கிளப்பு பிள்ளையார் கோவில் வரைக்குமுள்ள வீதியில் தங்கச்சங்கிலி தவறவிடப்பட்டுள்ளது. கருணை உள்ளம் கொண்ட கண்டெடுத்தவர்கள் ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(CS 42233) (3/6) **077 990 7276**

## நியூ பாரதி கல்வி நிலையம்

கந்தரோடை, சுன்னாகம்.

**தரம் 4, 5 இற்கான புலமைப்பரிசில் வகுப்புக்கள்**

**ஆசிரிர் : திரு.P.விஜிந்தன்**
[N.Dip.in.Teach (Merit), B.A, PGDE Dip.in.Couns,M.Ed]

**ஆரம்பம்:**
**16.01.2022 (ஞாயிறு) மு.ப 10.00 மணி**

(CR 7101) 1-6

## வீடு வாடகைக்கு

கொழும்புத்துறை பிரதான வீதியில் 3படுக்கை யறை 1 சமையலறை பெரியகோல் சுற்றிவர பல்கனியுடன் தென்னம் தோப்பிற்குள் 2 மாடி வீட்டில் கீழ் வீடு வாடகைக்கு உண்டு.

**விபரங்களுக்கு தொடர்புகொள்ள வேண்டியவை**
**021 205 1070 Monday to Sunday**
**077 610 3546 சனி ஞாயிறு தொடர்பு கொள்க**

(CS 42200) (3/6)

## மரண அறிவித்தல்



## திருமதி. பத்மராணி சிவன்நேசன்

யாழ் சங்கானையைப் பிறப்பிடமாகவும். சங்கானை (நிம்மதி) தேவாலய வீதியை வதிவிடமாகவும் கொண்ட பத்மராணி சிவன்நேசன் அவர்கள் 13.01.2022 (வியாழக்கிழமை) அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்ற கனகரத்தினம். ஞானரத்தினம் தம்பதிகளின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற செல்வரத்தினம் சிவன்நேசன் (இளைப்பாறிய மின் பொறியியலாளர் இலங்கை மின்சார சபை) அவர்களின் ஆருயிர் மனைவியும் சிவானி. சிவாஜினி. சிவாஞ்ஜன். சிவாஞ்சலி ஆகியோரின் பாசமிகு தாயாரும். இ.கருணாகரன். அ.கருணாகரன். ஜெயவதனி. இராமேஷ்வரன். ஆகியோரின் பாசமிகு மாமியாரும். டினுஷன். ஜெனுஷன். பிரஷான். கிருஸ்ஷான். விதுஷன். வர்ஷினி. விகேஷன். ரவுஷன். ரக்ஷா ஆகியோரின் பாசமிகு பேத்தியும். காலஞ்சென்ற பத்மராஜன். இரவீந்திரன். குணரதி. ஆகியோரின் அன்புச் சகோதரியும். காலஞ்சென்ற இந்திராணி. அம்பாளிகை. லோகேந்திரா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரட்ண "ரெஸ்பெக்ட்" (Borella Jeyaratna Respect) மலர்ச்சாலையில் 15.01.2022 (சனிக்கிழமை) அன்று மு.ப 9.00 மணிமுதல் பி.ப 5.00 மணிவரையும். பின்னர் 16.01.2022 (ஞாயிற்றுக்கிழமை) மு.ப 9.00 மணிமுதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு. பி.ப 3.00 மணிக்கு கிரிகைகள் நடைபெற்று பொரளை மயானத்தில் தகனம் செய்யப்படும்."

**இவ்வறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.**

சி. சிவாஞ்ஜன் (மகன்)
21/1B, பீரான்சீஸ் வீதி. வெள்ளவத்தை
0777667746 / 0764260975

## துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலையின் ஆசிரியை திருமதி. கிருஷாந்தி சந்திரகுமார் அவர்களின் அன்பு மாமனார்

**பிரகாசிப்பிள்ளை சந்தியாப்பிள்ளை**

கடந்த 13.01.2022 அன்று இறைபதம் அடைந்தார். அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரிய நலன்புரிச்சங்கம்**
**யா/ சென். ஜேம்ஸ் மகாவித்தியாலயம்**
**குருநகர், யாழ்ப்பாணம்.**

(CS 42234) (3/6)

## அம்மாவின் விண்ணக வாழ்வில் 18ஆம் ஆண்டு



## திருமதி லில்லி தேவசகாயம்

**இறப்பு : 16.01.2004**

உயிர்பும் வாழ்வும் நானே
உயிரோடு இருக்கு போதே
என்னிடம் நம்பிக்கை கொள்பவர்
எவரும் என்றுமே சாகமாட்டார் இறைவாக்கு
அம்மா இறை அமையுடன் உங்கள்
பிள்ளைகள் யாவருக்கும் இறைவனை வேண்டுங்கள்.

**இல. 28, றக்கா லேன்,**
**சுண்டுக்குளி**

**அன்புப் பிள்ளைகள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**
**பூட்டப்பிள்ளைகள்**

# மரண அறிவித்தல்



**தோற்றம்**
**29.08.1950**

**மறைவு**
**12.01.2022**

## திருமதி
## இரத்தினவேல் அன்னலட்சுமி
## (வந்தேன்)

யாழ். கந்தரோடை சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினவேல் அன்னலட்சுமி அவர்கள் கடந்த (12.01.2022) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி இரத்தினம் அவர்களின் இளைய மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை பாக்கியம் அவர்களின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இரத்தினவேலின் அன்பு மனைவியும், ஜெயமோகன் (சுவிஸ்), ஜெயந்தினி, ஜெயச்சந்திரன் (பிரான்ஸ்), சுகந்தினி, ஜெயசாந்தினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், இராசமலர், நடராசா, காலஞ்சென்ற இராசதுரை மற்றும் செல்வராசா ஆகியோரின் அன்பு சகோதரியும், உஷாநந்தினி (சுவிஸ்) தர்மேந்திரா, ஸ்ரீகஜனி (பிரான்ஸ்) தனஞ்செயன் (பொலிஸ் சாஜன் பொலிஸ் நிலையம் தெல்லிப்பளை), சசிகுமார் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், வர்ஷனா (சுவிஸ்), ஷஜன், ஜஸ்விந் (பிரான்ஸ்) பபிலாஸ் (பிரான்ஸ்), ரிதுசனா, கவிஸ்னா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.01.2022) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கந்தரோடை சங்கம்புலவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல் :**
**குடும்பத்தினர்**

**தொடர்புகளுக்கு**
**மோகன் (மகன் - சுவிஸ்) - 0041 768315991**
**சந்திரன் ( மகன் - பிரான்ஸ்) - 0033 753 803698**
**மகள்மார் (இலங்கை) - 076 419 9851**
**தனஞ்செயன் (மருமகன் இலங்கை) - 077 277 3612**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

REGISTER NOW !

Hotline
0710 770 770,
0717 140 000

நிச்சயமான தொழிலை இலக்காகக் கொண்ட பாட நெறி

O/L பின் SCHOOL OF NURSING

ஒரு வருட தாதியர் பயிற்சி பாடநெறி

Registorad with TVEC
TERTIARY AND VOCATIONAL EDUCATIN COMMISSION
Approved by: Foreign Ministry



உள்நாட்டு வெளிநாட்டு தொழில் வேலை வாய்ப்புக்கள் அதிகளவில் பெற்றுத் தர ஒரே ஒரு தாதியர் பாடசாலைக்கு புதிய மாணவர்களை சேர்த்துக் கொள்ளப்பட உள்ளனர் நுளைவுக்கான அடிப்படைத் தகைமைகள்

- க.பொ.த. சா/த 5 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.
- உயரம் 4அடி 10 அங்குலம் இருத்தல் வேண்டும்.
- வயதெல்லை 16 – 30 ற்கு இடைப்பட்டிருத்தல்.

பயிற்சி நெறியினை சிறந்த முறையில் பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு TVEC நிறுவனத்தினால் அங்கிகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும்.

நாடு முழுவதிலும் அமைந்துள்ள ஆய்வுகூட உதவியாளர் வெற்றிடங்களை நிரப்பும் முகமாக.....

A/L பின்

MEDICAL LABORATORY TECHNOLOGY ASSISTANT
ஆய்வுகூட உதவியாளர் பயிற்சி நெறி

க.பொ.த. உயரதர விஞ்ஞான பாடத்திற்கு தோற்றிய நீங்களும், இப்பொழுது ஆய்வுகூட உதவியாளராகலாம்.






பிரதான காரியாலயம்

அய்வா தாதியர் பாடசாலை

PV 114302

28, பார் வீதி, மட்டக்களப்பு 071 872 2353, 065 222 9666
Web : www.myhopegroup.com E-mail : nadheer1976@yahoo.com

கிளைகள்

திருகோணமலை
203, பிரதான வீதி,
திருகோணமலை
071 992 6681

யாழ்ப்பாணம்
154, A/12, 2ம் மாடி,
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
071 872 2350, 071 770 770

முல்லைத்தீவு
P.W.D Road, Vannankulam,
Mullaititu.
077 171 0172, 075 286 8472
071 872 2352

wahts app மூலமும் தகவலைப் பெற்றுக் கொள்ளலாம். 0717 140 000


## மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 09 . 09 . 1968 | | 14 . 01 . 2022 |



### செல்வி சின்னத்துரை பரமேஸ்வரி (பவா)

"ஈஸ்வரவாசம்" கற்புலம் வீதி, உரும்பிராய் கிழக்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி பரமேஸ்வரி நேற்று (14.01.2022) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அமரர்கள் சின்னத்துரை கேதாரேஸ்வரி தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற சின்னத்துரை பரமேஸ்வரியின் பெறா மகளும், அமரர் விக்கினேஸ்வரன் (அளவெட்டி), ஜெகதீஸ்வரி, நகுலேஸ்வரன் (ஜேர்மனி), இராஜேஸ்வரி (திருவையாறு), காலஞ்சென்ற கணேஸ்வரன், கருணேஸ்வரி, ஞானேஸ்வரன் (அளவெட்டி), திலகேஸ்வரி (கனடா) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.01.2022) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் இடம்பெறுமென்பதை அறியத்தருகின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பிற்கு:
ஜெகதீஸ்வரி : 021 223 1160

தகவல்:
குடும்பத்தினர்

(CS 1131) 01/06

## மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 29 . 09 . 1942 | | 14 . 01 . 2022 |



### திருமதி பொன்னுத்துரை யோகம்மா

புலோலி வடகிழக்கு புலோலியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னுத்துரை யோகம்மா நேற்று (14.01.2022) வெள்ளிக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து - நகுலம்மா தம்பதியரின் புத்திரியும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சோமு தம்பதியரின் அன்பு மருமகளும், பொன்னுத்துரையின் பாசமிகு மனைவியும், சந்திரபோஸ் (இளைப்பாறிய விலைமதிப்பு பரிசோதகர்) அவர்களின் அன்புச் சகோதரியும், வாலாம்பிகை (அச்சுவேலி) காலஞ்சென்ற சிற்றம்பலம் (காந்தி) சிவபாக்கியம் (இரத்தினம் - Canada), காலஞ்சென்றவர்களான சபாபதி, ரூபசிங்கம் (கிளிநொச்சி), இராசசிங்கம் (யாழ்ப்பாணம்), துரைசிங்கம் (கிளிநொச்சி) மற்றும் சாந்தகுமாரி (France), நிர்மலாதேவி (Canada) ஆகியோரின் அன்பு மைத்துனியும் இரட்ணதுரை (UK), ஜெயந்தி (Colombo), ஜெயக்குமார் (Canada), சோபா ஆகியோரின் அன்புத் தாயாரும், ரஞ்சினி (UK), ஸ்ரீதங்கராஜா (இளைப்பாறிய கணக்காய்வாளர் RDA-Colombo), சசிமாலா (Canada) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஜெசேன், ஜெசிதா, ஜெறிதா (UK), சாஜிஸ்ரீ, பிரியங்கா (Colombo), ஜெனன், வருண் (Canada) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.01.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

புலோலி வடகிழக்கு,
புலோலி.

தகவல்:
குடும்பத்தினர்.
077 313 9317

(CS 71031) 1/6

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
29.03.1944

மறைவு
06.02.2020

யாழ். புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தைப்பிறப்பிடமாகவும்,
பெருமாள் கோவிலடி யாழ். பாடி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் தம்பிப்பிள்ளை மகேஸ்வரி

அவர்களின் 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திதி : 15.01.2022

அன்புள்ள அம்மா!
உங்களை நினைக்கும் போது வரும் கண்ணீரை
நாங்கள் துடைத்தாலும்
எங்கள் இதயத்தின் வலி நிரந்தரமானது..

காலங்கள் பல கடந்தாலும் கண்மணிகள்
நாம் கலங்கி நிற்கின்றோம்
வாராயோ ஒரு முறைவரம்
ஏதும் தாரோயோ அம்மா...

உங்கள் வழிநடத்தல் இன்றி
உங்கள் குரல் கேட்காது
ஒவ்வொரு நொடிப் பொழுதும்
நாங்கள் ஏங்குகிறோம் அம்மா

உங்கள் அன்பும் பாசமும்
எங்களுக்கு வேண்டும் அம்மா
எங்கள் உள்ளம் ஏங்குகின்றது.
வழிமேல் வழி வைத்து காத்திருக்கின்றோம்
வந்து விடுங்கள் மீண்டும் எங்களிடம்...

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(CS 42237) (3.6)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு
20 . 01 . 1936



இறப்பு
09 . 01 . 2022

## திரு.தம்பாப்பிள்ளை வைரவநாதன்

**(நீர்பாசன திணைக்களம்)**

இணுவில் கிழக்கை பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பாப்பிள்ளை வைரவநாதன் கடந்த 09.01.2022 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பாப்பிள்ளை - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - இராஜேஷ்வரி தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற திரெளபதாதேவியின் அன்புக் கணவனும், காலஞ் சென்றவர்களான நாகரத்தினம், சோமசுந்தரம், இரட்ணசபாபதி ஆகியோரின் இளைய சகோதரரும், கணேஷ்வரன் (UK), மகேஷ்வரன் (UK), நளினி (கொழும்பு), ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஞானேஸ் (UK), டுஷ்ஷந்தி (UK), பாஸ்கரன் (கொழும்பு), ஆகியோரின் அன்பு மாமனாரும், ஹரிணி, தனுஷன், சரண்யா, பிரித்திவ், சிவகாமி, ரந்திவ் ஆகியோரின் பாசமிகு அப்பப்பாவும், ராகவி - வினோஜன், பார்கவி, ப்ரகவி, ஆகியோரின் பாசமிகு அம்மப்பாவுமாவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக ஜெயரட்ண மலர்ச்சாலையில் இன்று (15.01.2022) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிமுதல் 5.00மணிவரை வைக்கப்பட்டு, மீண்டும் நாளை மறுநாள் காலை 9.00 மணி முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பிற்பகல் 2.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று 4.00 மணியளவில் தகனத்திற்காக பொரளை பொது மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

20, Suvisuddharama Road,
Colombo - 6
011 258 1718

தகவல்:
மகன் (V. கணேஸ்வரன் - குமரன்)
077 908 5335, 077 768 6286

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
02.02.1939

மறைவு
15.12.2021

கடந்த15.12.2021 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

## அமரர் பொன்னையா சண்முகநாதன்

**(எழுத்தாளர், கலாபூஷணம் – சண் அங்கிள்)**

அவர்களின் மறைவுச்செய்தி கேட்டு அனுதாபங்கள் தெரிவித்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (15.01.2022) சனிக் கிழமை முற்பகல் 08.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனை 16.01.2022 ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகைதந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
கந்தரோடை, சுன்னாகம்.

(CS 42236) (3.6)

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## திருமதி பாலசுப்ரமணியம் செல்வராணி

ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலசுப்ரமணியம் செல்வராணி அவர்கள் நேற்று முன்தினம் (13.01.2022) வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு பராசக்தி தம்பதி களின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தையா சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மருமகளும், பாலசுப்ரமணியம் (எவகீறின் பிறிண்டர்ஸ் அச்சக முகா மையாளர்) அவர்களின் அன்புத் துணைவியாரும், சதீஸ் (பிரான்ஸ்), சகிலா, சத்தியா ஆகியோரின் அன்பு தாயாரும், தாருகா (பிரான்ஸ்), ஜனார்த் தனன் (பிரான்ஸ்), ரஜனிகாந் (CTB Engineer காரைநகர்) அவர்களின் மாமியாரும், அக்‌ஷயா, சஞ்ஜனா, ரித்தீஸ், அனன்யா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், மகேந்திரன், இந்திராணி, காலஞ்சென்ற ஜெயராணி, விஜயராணி (ஆசிரியர், சென்.ஜோசப் வித்தியாலயம் கொழும்புத்துறை) காலஞ்சென்ற ஜிவராணி, சுரேந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான பரமானந்தம், பரஞ்சோதி, பாலசுந்தரம் மற்றும் புஸ்பராணி, பாலரட்ணம் (ஜேர்மன்), யோகராணி, சண்முகநாதன், இந்திராணி (ஜேர்மன்), சண்முகரட்ணம் (ஜேர்மன்), தேவராசா, பிறேம நாயகி, நிமலராசா, சிறிதரன், சாந்தி அவர்களின் அன்பு மைத்துனியும், பாலசிங்கம் - அன்னபூரணி தம்பதிகளின் பாசமிகு மருமகளும், காலஞ் சென்ற நாகேஸ்வரி, புஷ்பராணி ஆகியோரின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.01.2022) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் ஈச்சமோட்டையுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி மயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

94/4, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்

தகவல்
குடும்பத்தினர்

077 524 3849 (கணவன்)
077 903 7381 (மருமகன்)

தோற்றம்
21.01.1957

மறைவு
13.01.2022

(CS 1126)(3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடனமாடியவர் மயங்கி வீழ்ந்து உயிரிழப்பு

கொழும்பு, ஜன. 15
பாணத்துறை கொரகானவில் ஹோட்டலில் இடம்பெற்ற திருமண நிகழ்வில் நடனமாடிக் கொண்டிருந்த இளைஞர் திடீரென மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார். இந்தச்சம்பவம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.
சம்பவ தினத்தன்று உயிரிழந்தஇளைஞர் தனது நண்பியின் திருமாண நிகழ்வில் கலந்து கொண்டுள்ளார். இதன்போது ஏனைய நண்பர்களுடன் நடனமாடிக் கொண்டிருக்கையில் திடீரென மயங்கி விழுந்துள்ளார். பாணந்துறை மருத்துவமனைக்குக் கொண்டு சென்ற பின்னர் அங்கு அவர் உயிரிழந்தார். (ஒ-இ)

# ரயில் நிலைய அதிபர்கள் நேற்றும் போராட்டம் நடத்தினர்

ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் மீண்டும் நேற்று மதியம் போராட்டத்தை ஆரம்பித்து நேற்றுமாலையே அதைக்கைவிட்டனர். ரயில் நிலைய அதிபர்கள் சங்கத்தின் உப தலைவரைப் பணி இடைநிறுத்தம் செய்ய, பொது முகாமையாளரால் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு எதிராக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.
நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்ட அடையாள வேலைநிறுத்தம் நேற்று நிறைவடைந்தது. எனினும் சில மணித்தியாலங்களில் மீண்டும் அவர்கள் அவசர வேலைநிறுத்தத்தை ஆரம்பித்தனர். நேற்றுப் பிற்பகல் தமது கடமைகளில் இருந்து விலகி எதிர்ப்பை வெளியிட்டனர். பின்னர் அது கைவிடப்பட்டது.
(ம-4-இ)

# கொரோனா: பாடசாலைகள் மூடல்

அதிகரிக்கும் கொரோனா பரவல் காரணமாக இந்தியாவின் மத்திய பிரதேசத்தில் உள்ள அனைத்து தனியார் மற்றும் அரசு பாடசாலைகளை எதிர்வரும் 31ஆம் திகதி வரை மூட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.
மத்திய பிரதேசத்தில் நேற்று முன்தினம் ஒரேநாளில் 4 ஆயிரத்து 31 பேருக்கு புதிதாகக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.
இந்த நிலையில், வைரஸ் பரவல் அதிகரித்து வருவதால் அனைத்துப் பாடசாலைகளையும் எதிர்வரும் 31ஆம் திகதி வரை மூட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள் ளது. மேலும், அரசியல், மதம் சார்ந்த நிகழ்ச்சிகளுக்கும் தடை விதிக்கப்பட் டுள்ளது.
(ச)

## வேலையாள்கள் தேவை

யாழ். கோண்டாவிலில் இயங்கிவரும் மிக்சர் தொழிற்சாலைக்கு பொதி செய்வதற்கு பெண் வேலையாள்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

(cs.42184) (2.6)

077 360 3839

# இனிமேல் தண்டம்

சென்னை, ஜன.15
போகிப் பண்டிகையின்போது பிளாஸ்ரிக் மற்றும் இரசாயனம் கலந்த பொருள்களை எரித்தால் தண்டம் விதிக்கப்படும் என சென்னை மாநகராட்சியால் எச்சரிக்கப்பட்டுள்ளது.
தமிழர்களின் திருநாள் என அழைக்கப்படும் பொங்கலுக்கு முதல்நாள் 'போகி' எனப்படும் பண்டிகை இந்தியாவில் கொண்டாடப்பட்டது.
இப்பண்டிகையானது எமது மனதில் உள்ள கெட்ட எண்ணங்கள், தீயகுணங்கள் போன்றவற்றை முற்றிலுமாக நீக்கி, புதிய நல்ல எண்ணங்களைக் கொண்டுவர வேண்டும் என்பதை உணர்த்தும் வகையில் கொண்டாடப்படுகிறது.
அந்தவகையில் இப்பண்டிகையின்போது மக்கள் தமது வீடுகளில் உள்ள பழைய பொருள்களை எரித்து வருகின்றனர்.
ஆனால் தற்காலத்தில் போகிப் பண்டிகையின் போது பழைய பொருள்களான பிளாஸ்ரிக், செயற்கை இழைகளால் தயாரிக்கப்பட்ட துணிகள், றப்பர் பொருள்கள், போன்றவையும் எரிக்கப்பட்டு வருகின்றன. இதனால் காற்றுமாசு ஏற்படுகிறது.
இந்த நிலையில் போகிப் பண்டிகையில் பிளாஸ்ரிக் பொருள்களை மக்கள் எரிக்கக்கூடாது எனவும் மீறி எரித்தால் தண்டபம் விதிக்கப்படும் எனவும் சென்னை மாநகராட்சி எச்சரித்துள்ளது. (ச-இ)

# நீல இரத்தினக்கல் கின்னஸ் சாதனை

கொழும்பு, ஜன. 15
கடந்த வருடம் இரத்தினபுரியில் கண்டு பிடிக்கப்பட்ட 500 கிலோ எடையுள்ள நீல நிற இரத்தினக் கல், உலகின் மிகப் பெரிய சபையர் இரத்தினக்கல் கொத்து என கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்துள்ளது.
தற்போது சுவிற்ஸர் லாந்தில் வைக்கப்பட்டுள்ள குறித்த இரத்தினக்கல் கொத்து, அதிக இலாபத்துக்கு ஏலத்தில் விற்பனை செய்யத் திட்டமிடப் பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள் ளது. சுவிற் ஸர்லாந்தில் நட்சத்திர இரத்தினக்கல் எனச் சான்றளித்து கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடித்துள்ளது. 510 கிலோகிராம் அல்லது 2.5 மில்லியன் கரட் எடையுள்ள இந்தக் கொத்து செரண்டிபிட்டி என்று அழைக் கப்படுகின்றது.
(ம-4-இ)

## பண்ணைத் தொழிலாளி தேவை

இயற்கை விவசாயப் பண்ணைக்கு, புல்வேறு வேலைகளிலும் ஈடுபடக்கூடிய தொழிலாளி ஒருவர் தேவை. பசுக்களில் பால் எடுத்தல் வேண்டும். உடனே தொடர்பு கொள்ளவும்.

MAVAI

திருநாவுக்கரசு நினைவு
மாதிரிப் பண்ணை, மாவிட்டபுரம்.

(CS 1111) (3/6)

076 234 8877

"ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ"

## 16ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
02 . 02 . 1943

மறைவு
03 . 01 . 2022



### அமரர் சுப்பையா நாகம்மா

கடந்த 03.01.2022 அன்று இறைபதமடைந்த அமரர் சுப்பையா நாகம்மா அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் நாளை (16.01.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் எதிர்வரும் (18.01.2022) செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெற இருப்பதால் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

பரவக்குளம் ஒழுங்கை,
சிவன் வீதி, திருநெல்வேலி.

குடும்பத்தினர்.
077 785 4239

## 1ஆம் ஆண்டு ஆத்ம சாந்தி அழைப்பிதழ்



கடந்த 27.01.2021 சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைமகன்

அமரர்

### சின்னத்துரை துரைராஜா

அவர்களின் முதலாம் ஆண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வு நாளை (16.01.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் ஊரிக்காடு இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

[illegible]றிகொழு வீதி,
ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முள்ளிவாய்க்காலில்...

பிரதேச மக்கள் நேற்று வழங்கிய தகவலுக்கமைய பாதுகாப்பு தரப்பினர் குறித்த பகுதியில் நிலத்தில் புதைக்கப்பட்டிருந்தநிலையில் வெளித்தெரிந்த விடுதலைப்புலிகளின் சீருடை, அடையாளஅட்டை, வயர், பற்றரிகள் உள்ளிட்ட பொருள்களை மீட்டனர். (து-19)

## பாலத்துள் பாய்ந்த...

உழவு இயந்திரம் பாலத்துக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளானது.

இந்தச் சம்பம்பவம் நேற்றுமாலை இடம்பெற்றது.

உழவு இயந்திரத்தை மீட்கும் பணி இடம்பெறுகின்றது.

அதன் சாரதிக்கு பெரியளவில் காயமேற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (து-19)

## குளித்த...

ஒரே வகுப்பில் கல்வி பயிலும் 7 மாணவர்கள், நேற்றுமதியம் அருகிலுள்ள கடற்கரைக்குச்சென்று குளித்துள்ளனர்.

வழமைக்கு மாறாக கடலின் அலை நேற்று உயர்ந்திருந்தது. இந்தநிலையில், மூவர் கடலலையில் அள்ளிச்செல்லப்பட ஒருவர் தெய்வாதீனமாகக் காப்பாற்றப்பட்டார். எனினும், மற்றைய இருவரும் காணாமற்போயுள்ளனர். அவர்களைத்தேடும் பணியில் கடற்படையினர், கல்குடா சுழியோடிகள் மற்றும் உள்ளூர் மீனவர்கள் ஈடுபட்டுள்ளனர். கல்குடா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (து-இ)

## சில்லுக்குள்...

இடம்பெற்றுள்ளது.

புத்தூர் கலைமதி பகுதியைச் சேர்ந்த சின்னதம்பி தெய்வேந்திரன் (வயது - 48) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார் என்று அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் அச்சுவேலி பிரதேச மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

(து-26)

## இலங்கையில் ...

யாவசியமானதாகும் என்று விசேட மருத்துவ நிபுணர் தீபா கமகே தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒமிக்ரோன் தொற்றால் ஏற்படக்கூடிய அச்சுறுத்தலிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்காகவே 11 ஆம் திகதி தொடக்கம் 18 ஆம் திகதி வரையான ஒரு வார காலத்தில் விரைவாக தடுப்பூசி வழங்கும் வேலைத் திட்டத்தை முன்னெடுத்துள்ளோம்.

எனவே, இந்த விடுமுறை நாள்களைப் பயன்படுத்திக்கொண்டு சகலரும் விரைந்து தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறில்லையெனில், கொரோனா அச்சுறுத்தலிலிருந்து மீள்வது கடினமாகும் என்றார். (து-இ)

## தீர்வுபற்றி...

தொடர்ந்தும் செயற்படுகின்றார். இது நல்ல விடயமல்ல என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் நேற்று மேலும் தெரிவிக்கையில்,

13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தும்படி மனுக்கொடுப்பது தொடர்பாக சில மாதங்களாக பல்வேறுபட்ட அரசியல் கட்சிகள் பேச்சு நடத்தி ஆவணத்தைத் தயார்ப்படுத்தியுள்ளன. மிக அவசரமாக இந்தியத் தூதர் நாடு திரும்பிச்சென்றுள்ளமையால், அந்த ஆவணத்தைக் கொடுக்கமுடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.

இந்தியத் தூதர் வந்தவுடன் அந்த ஆவணம் கொடுக்கப்படுமென நாங்கள் எதிர்பார்க்கிறோம். ஆனால், அநாகரிகமானதொரு விடயம் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றது. சுமந்திரன் ஊடகவியலாளர்களை சந்திக்கின்ற பொழுது, நாங்கள் இந்த ஆவணத்தை முற்றுமுழுதாக மாற்றிவிட்டோம். இது தமிழ் அரசுக் கட்சியின் ஆவணமாக மாறிவிட்டது என்று ஒரு விடயத்தைத் தொடர்ந்து சொல்லிவருகின்றார்.

சுமந்திரனைப் பொறுத்தவரையில், 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தும் ஆவணத்தைக் கொடுப்பதற்கு அவர் விரும்பவில்லை என்பதை யாழ்ப்பாணத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் தெளிவாகக்கூறி இருக்கின்றார். ஆனால், சம்பந்தன் உட்பட ஏனைய கட்சிகள் அனைத்தும் இப்பொழுது 13 ஐ நடைமுறைப்படுத்தும்படி கூறும்போது வடிவேலு பாணியில் நாங்கள் மாற்றிவிட்டோம் என்று சுமந்திரன் கூற ஆரம்பித்திருக்கிறாரா? என்ற கேள்வி எழுகின்றது.

இதேவேளை,ஒவ்வொரு நான்கு வருடங்களுக்கும் ஐந்து வருடங்களுக்கும் ஒருமுறை உள்ளூராட்சி சபை, மாகாண சபை நாடாளுமன்றத் தேர்தல்கள் நடைபெறவேண்டும். ஆனால் பல, காலமாக மக்களுடைய ஜனநாயக உரிமை மறுக்கப்பட்டுள்ளது. கடந்த அரசாங்கமும் சரி தற்போதைய அரசாங்கமும் சரி மாகாண, உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை நடத்துவதற்கு அஞ்சுகின்றன.

இன்று அரசாங்கம் எந்த ஒரு தேர்தலையும் நடத்தக்கூடிய ஒரு சூழ்நிலையில் இல்லை. மிகமோசமான பொருளாதார நிலைமை, அரசாங்கத்துக்கு எதிரான மக்கள் எழுச்சி, தொழிற்சங்கப் போராட்டங்கள் என்பவற்றால் பிரதமர் உட்பட அனைத்து அமைச்சர்களும் தங்களது அரசு கடந்த இரண்டு வருடங்களாக செயலற்ற அரசு என்பதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். உள்நாட்டு பொருளாதாரக் கொள்கையும் சரி வெளிவிவகாரக் கொள்கையும் சரி தோல்வியில் முடிந்த காரணத்தால்தான் நாடும் தோல்வி அடைந்துள்ளது- என்று கூறினார். (து-20)

## மயங்கி...

இந்தச் சம்பவம், மந்துவில் பகுதியில் நேற்று மதியம் இடம்பெற்றது.

மந்துவில் மேற்கு கொடிகாமத்தைச் சேர்ந்த சத்தியராஜ் ஜானுசன்(வயது - 9) என்பவரே உயிரிழந்தார். கோவிலுக்கு சென்றுவந்த சிறுவன் வாந்தி எடுத்துள்ளார். அதன் பின்னர் வீட்டுக்குச்சென்று மயங்கி வீழ்ந்தார். அதனால் உடனடியாக அவரை சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு கொண்டுசென்றுள்ளனர். அங்கு மேற்கொண்ட பரிசோதனையில் அதற்கு முன்னரே சிறுவன் உயிரிழந்துவிட்டார் என்பது தெரியவந்தது என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. கொடிகாமம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். சடலம் மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (து-159)

## போர்க்குற்றவாளிகளுக்கு...

அமைப்பு, ஸ்ரீலங்கா கம்பெய்ன் அமைப்பு, பேர்ள் அமைப்பு, தடைவிதிப்பதற்கான தமிழர்கள், சுதந்திர ஜனநாயகவாதிகளின் தமிழ் நண்பர்கள் ஆகிய 7 சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்கள் இணைந்து கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்ட விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. (து-இ)

## நல்லூர்...

நடத்தப்பட்டமை தமிழ் மக்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ் மக்களின் கலாசாரத்தின் ஓர் அங்கமாக தைப்பொங்கல் நிகழ்வு கருதப்படுகின்றது. இன நல்லிணக்கம் என்ற போர்வையில், தங்களின் சுயலாபத்துக்காகச் சிலர் தமிழ் மக்களின் கலாசார நிகழ்வுகளில் பிறமத கலாசாரங்களைப் புகுத்தும் இரகசிய நிகழ்ச்சிநிரலில் இயங்குகின்றனர் என்றும் பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

யாழ்ப்பாணம் நல்லூரில், நல்லை ஆதீனத்துக்கு முன்பாக நேற்றுப் பொங்கல் விழா நடைபெற்றது. சர்வதேச இந்து, பௌத்த ஒற்றுமைக்கான அமைப்பும், யாழ். நண்பர்கள் அமைப்பும் இணைந்து இந்தப் பொங்கல் விழாவை ஏற்பாடு செய்திருந்தன.

அதில் கலந்துகொண்ட பிரதம விருந்தினர்கள் கண்டிய நடனம், பொய்க்கால் குதிரையாட்டம், மயிலாட்டம் போன்றவற்றுடன் அழைத்து வரப்பட்டனர்.

வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, யாழ். மாவட்ட செயலர் க.மகேசன், வட மாகாண முன்னாள் [illegible] விகாராதி [illegible] குருமுதல்வர் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், மறவன்புலவு சச்சிதானந்தன், வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத் தூதரக அதிகாரிகள் மற்றும் மதத் தலைவர்கள் இராணுவ அதிகாரிகள் எனப் பலர் இந்த நிலழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

இதேவேளை, இந்த நிகழ்வுகளுக்கு இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் பலத்த பாதுகாப்பு வழங்கியிருந்தனர். பொங்கலின் பின்னரான நிகழ்வுகள் மண்டபம் ஒன்றில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தபோதும் பெரும் எண்ணிக்கையான ஆசனங்கள் வெறுமையாகவே காணப்பட்டன. (எ-20)

## பொருளாதாரப்...

நெருக்கடியின் மத்தியில், சட்டவாட்சி, ஜனநாயகம் மற்றும் மக்களின் வாழ்வியலில் ஏற்பட்டுள்ள தாக்கம் தொடர்பில் சங்கம் தீவிர கவனம் செலுத்தியுள்ளது.

நாட்டின் தற்போதைய சூழ்நிலையில், பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு இனியும் தாமதிக்காது தீர்வு வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பணவீக்க அதிகரிப்பு, சமையல் எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்களுக்கான தட்டுப்பாடு, கையிருப்புத் தட்டுப்பாடு, வெளிநாட்டவர்களுக்குப் பணம் அனுப்ப முடியாமை, கடன் தரப்படுத்தலில் இலங்கை பின்தள்ளப்பட்டமை, சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டமை, சில விமான நிலையங்களுக்கான நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டமை மற்றும் மின்சார நெருக்கடி போன்றவற்றால் இந்த அவசர தேவை உணரப்படுவதாக அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாட்டின் வெளிநாட்டு கையிருப்பு மூன்று பில்லியன் டொலராக அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளபோதிலும், அதில் எவ்வளவு தொகையைப் பயன்படுத்தமுடியும் என்பதனை ஆராய வேண்டும்.

தற்போதைய நெருக்கடி நிலைமைக்கு நிலையான தீர்வைப் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவான தொழில்நுட்ப விசேட நிபுணத்துவம் பெற்ற உள்நாட்டு, சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட சுயாதீன மற்றும் பக்கச்சார்பற்ற நிபுணர்கள், நிறுவனங்களின் உதவியை பெற்றுக்கொள்ளவேண்டும் - என்று சங்கம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (து-இ)

## குளத்திலிருந்து...

தனர்.

மாதகல் கடற்கரை வீதியை சேர்ந்த குணபாலசிங்கம் கடம்பகுமார் (வயது - 42) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவர் பேருந்து உரிமையாளர் என்றும் தெரிவிக்கப்பட்டது. தமக்குக் கிடைத்த தகவலின்படி குறித்த சடலம் மீட்கப்பட்டது என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த குடும்பஸ்தர், கடந்த 10 ஆம் திகதி காணாமற்போயுள்ளார் என்று அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர். விசாரணை தொடர்கின்றது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (து-319,125)

# நாட்டில் இந்த வருடம் உணவுப்பற்றாக்குறை!

*ஐ.நா. வும் அபாயச்சங்கு ஊதுகின்றது*

கொரோனா வைரஸ் பரவலின் விளைவாக ஏற்பட்ட நெருக்கடிகளின் தொடர்ச்சியாக, இலங்கையில் இந்தவருடம் உணவுப்பற்றாக்குறை, வெளிநாட்டுக்கையிருப்பு வீழ்ச்சி, உயர் கடன் இடர் உள்ளிட்ட பல்வேறு சவால்களுக்கு இலங்கை முகங்கொடுக்கக் கூடும் என்று ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார மற்றும் சமூக விவகாரத்திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள 2022 ஆம் ஆண்டுக்கான உலகப் பொருளாதார நிலைவரம் மற்றும் வாய்ப்புக்கள் தொடர்பான அறிக்கையில் உலகளாவிய ரீதியில் பொருளாதார இயங்குகையில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள காரணிகள் குறித்து விவரிக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில், இலங்கையைப் பொறுத்தளவில், இந்த வருடம் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2.6 சதவீதமாக அமையக்கூடும் என்றும் மதிப்பீடு செய்துள்ளது. (து-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அமெரிக்கப் பிரஜையான*

# பஸில் இலங்கையை எப்படிப் பாதுகாப்பார்?

*நீதிமன்றில் விஜயதாச ராஜபக்ச கேள்வி*

கொழும்பு, ஜன. 15

அமெரிக்கப் பிரஜையான பஸில் ராஜபக்ச, இலங்கையை பாதுகாப்பதாக எவ்வாறு உறுதிமொழி வழங்க முடியும் என ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான விஜயதாச ராஜபக்ச நீதிமன்றில் கேள்வி எழுப்பியுள்ளார்.

அமெரிக்கப் பிரஜையொருவர் இலங்கை நாடாளுமன்றில் உறுப்பினராக அங்கம் வகிப்பதனை சவாலுக்கு உட்படுத்தும் வகையில் தாக்கல் செய்யப்பட்ட மனு குறித்த நீதிமன்ற வழக்கு விசாரணைகளில் மனுதாரர்கள் சார்பில் முன்னிலையாகி அவர் இந்த வாதத்தை முன்வைத்துள்ளார்.

எந்த நேரத்திலும் அமெரிக்காவை பாதுகாப்பதற்காக ஆயுதம் ஏந்தவும் தயார் என உறுதிமொழி வழங்கி சத்தியப் பிரமாணம் செய்துகொண்டுள்ள பஸில் ராஜபக்ச, எவ்வாறு இலங்கையின் நலனை பாதுகாக்க செயற்படுவார் என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.



பஸில் ராஜபக்ச நாடாளுமன்ற உறுப்பினராகவும், நிதி அமைச்சராகவும் கடமையாற்றத் தகுதியற்றவர் என அறிவிக்குமாறு கோரி உலபனே சுமங்கல தேரர் உள்ளிட்ட சிலர் மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்த மனு மீதான விசாரணை கடந்த புதன்கிழமை நடைபெற்றது. இதன்போதே விஜயதாச ராஜபக்ச இவ்வாறு கேள்வி எழுப்பியமை குறிப்பிடத்தக்கது. (ம)

# ஜொலி லெஜன்ட்ஸ் திரில் வெற்றி

யாழ்ப்பாணம், ஜன. 15

ஜொலி பாஷ் லீக் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டமொன்றில், ஜொலி லெஜன்ட்ஸ் அணி 2 ஓட்டங்களால் திரில் வெற்றிபெற்றது.

ஜொலி லெஜன்ட்ஸ் அணியை எதிர்த்து ஜொலி பைட்டர்ஸ் அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொலி லெஜன்ட்ஸ் அணி 10 பந்துப்பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 70 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக உதயசூரியன் கேதீஸ் 31 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் ராகுலன் 2 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய ஜொலி பைட்டர்ஸ் அணி, 10 பந்துப்பரிமாற்றங்களில் 68 ஓட்டங்களை மட்டுமே பெற்று 2 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. சஜீகன் 21 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றார். பந்துவீச்சில் உமேஸ் 2 இலக்குகளைக் கைப்பற்றினார். (ம)

*2020ஆம் ஆண்டில்*

# ரூபா 1,400 பில். அச்சிடப்பட்டது

கொழும்பு, ஜன. 15

கடந்த ஆண்டில் மொத்தமாக ஆயிரத்து நானூறு பில்லியன் ரூபா பணம் அச்சிடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் பொருளியல் ஆய்வுப் பிரிவின் பணிப்பாளர் ஆர்.ஏ.அனில் பெரேரா இந்த விடயத்தை தெரிவித்துள்ளார். ஆயிரத்து 400 பில்லியன் ரூபா பணம் அச்சிடப்பட்டுள்ளமை இரகசியம் கிடையாது என அவர் குறிப்பிட்டுள்ளார். (ம)

# யானை மீது மோதியது வான்

*சாரதி ஆபத்தான கட்டத்தில்*

கொழும்பு, ஜன. 15

காட்டு யானை மீது வாகனம் மோதியதில் வாகனச்சாரதி படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். பலாங்கொடை வெல்லவாய வீதியில் நெலுல்ல பிரதேசத்தில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. (ஒ - இ)


## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் நாவற்குழி A32 மெயின் றோட்டில் 1ஆம் வீதியில் 64 பரப்புக்காணி 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.
நாவற்குளி சந்தியிலிருந்து 300 m தூரம் வீடு அமைப்பதற்கு நல்ல சூழல். 1 நிலப்பரப்பின் விலை 5 லட்சம்

**076 890 9259, 077 015 0353**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி ஐயனார் கோவில் வீதியில் 18 அடி பாதையுடன் 24 பரப்புக் காணி 1 1/2, பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு. (மேட்டுநிலம், நிலபரப்பு, நாவற்குழி சந்தியிலிருந்து 1/2 km தூரம்)
ஒரு பரப்பின் விலை 3 லட்சம்.

தொடர்பு: **077 911 6983, 077 658 5999, 077 288 0152, 077 623 4204.**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் இருந்து நுணாவில் செல்லும் A9 பிரதான வீதியில் நல்ல தண்ணீர் பொதுக் கிணற்றடி அருகாமையில் நிலபரப்பு 12 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடி பாதையுடன் கைதடி பிள்ளையார் கோயிலில் இருந்து 500 M தூரம்.
பார்வையிடும் நேரம் : காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை.
தரகர் தேவையில்லை. விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்பு: **077 814 7389, 077 614 7333**

## ஆடை தொழிற்சாலைக்கு பணி புரிய பெண் வேலையாட்கள் தேவை

- Single needle
- Duble needle
- Five third orlog
- Flat lock
- Button hole
- Button atacher
- Feed of the arma
- Screen Printing

(அனுபவ முள்ளவர்கள்)

1. மேலே குறிப்பிடப்பட்ட இயந்திரத்தில் 3 இயந்திரம் சரளமாக இயக்க தெரிந்தால் மாதாந்தம் 25.000 வேதனம் வழங்கப்படும் மேலும் சலுகைகள் உண்டு.
2. உதவியாளர் மற்றும் பொதியிடுதல் பணிக்கு வேலையாட்கள் தேவை திறமைக்கேற்ப நேரில் பேசி சம்பளம் தீர்மானிக்கப்படும்.
3. தையல் பழக விரும்புவர்களும் உள்வாங்கப்படும் இவர்களுக்கும் கணிசமான கொடுப்பனவு கொடுக்கப்படும்.
4. தங்குமிட வசதியும் உண்டு.
5. ஆடைதொழிற்சாலையில் பணிபுரிந்த அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்பு **077 748 2444**

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் ஊரெழு பிள்ளையார் கோவில் வீதியில் 16 பரப்புக் காணி விற்பனைக்கு. 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது. நல்ல சூழல்.
பலாலி வீதியில் இருந்து 300 M தூரம்.
தரகர் தேவையில்லை.

**076 1633 176**

(CS 1136) 1-6

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் அராலி வீதியில் 2ம் ஒழுங்கைப் பகுதியில் 5 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. (12 அடி பாதையுடன் நெற்பரப்புடன் கூடிய காணி) மற்றும் முருகமூர்த்தி வீதி. வண்ணார் பண்ணையில் 3 பரப்பு காணி 12 அடி நீள பாதையுடன் விற்பனைக்கு உண்டு. விலை நேரில் பேசி தீர்மானிக்கலாம். யாழ். நகரிலிருந்து 1 1/2 km தூரம்.

தொடர்புகளுக்கு: **074 0089 086, 077 883 4749**



உ
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ
சாவகச்சேரி-சங்கத்தானை
ஈழவாரியம்பதியுறை

### ஸ்ரீ மீனாட்சி அம்பாள் தேவஸ்தான பரிபாலன சபையின் வருடாந்த பொதுக்கூட்டம்

மேற்படி வருடாந்த பொதுக்கூட்டம் 23.01.2022 ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் ஆலய மண்டபத்தில் நடைபெறும்.
அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது சமூகமளிக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி

(CR 7105) 1-6

ஸ்ரீ மீனாட்சி அம்பாள் ஆலயம்
சங்கத்தானை.

பரிபாலன சபை


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 27.09.1949

இறப்பு 15.01.2021

அமரர் கந்தசாமி சந்திரபாலன்
(ரைக்ரர் சின்னக்கிளி)

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு வழிகாட்டியாய்
உற்றார், உறவினர், நண்பர்களுக்கு இனியவனாய்
வாழ்ந்து எம்மைவிட்டு பிரிந்து
ஆண்டு ஒன்று மறைந்ததையா
எம் உள்ளங்களில் என்றும் நிலைத்திருக்கின்றீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.01.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.